பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 275 ஆவணி 14 ஆம் நாள் சனிக்கிழமை 31 ஒகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

UGC Recognized ....
International Degree in
Bachelor of Education
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## இன்னும் சிலருக்கு நம்பிக்கை இருக்கின்றது

### யாழ்ப்பாணம் வந்த மைத்திரிபாலவிடம் கூறினார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 31
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகளில் எஞ்சிய வாக்குறுதிகளை, மீதமுள்ள பதவிக் காலத்தில் நிறைவேற்றுவார் என்று எங்களில் சிலர் இன்னமும் நம்புகின்றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" தேசிய வேலைத் திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு 25



## டிசெ. 10 மகிந்த ஓய்வு!

யாழ்ப்பாணம், ஓக. 31
தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய டிசெம்பர் 10 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். அதற்கு முன்னதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 25

## துர்க்கை அம்மன் கொடி இன்று

யாழ்ப்பாணம், ஓக. 31
வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
இன்று காலை சிறப்பு பூசைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றம் நடைபெறும். தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா 25

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
கிளிநொச்சியில் வீதியை உந்துருளியில் கடக்க முயன்றவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.
கிளிநொச்சி. ஆனந்தபுரத்தைச் சேர்ந்த கோ.செல்வராசா (வயது -67) என்பவரே உயிரிழந்தார். இவர் 25

# தேவை புதிய அரசமைப்பு தடுப்பது நாடாளுமன்றமே

- தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது ஐக்கிய தேசியக் கட்சி!
- இந்தப் பாவங்களுக்கு நான் பொறுப்பல்ல!
- யாழ்ப்பாணத்தில் பொரிந்துதள்ளினார் மைத்திரிபால!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31
நாடு முன்னேறிச் செல்வதற்கும் கட்டியெழுப்புவதற்கும் புதிய அரசமைப்பு அவசியம். அதனை கடந்த நான்கு ஆண்டுகளில் நாடாளுமன்றம் நிறைவேற்றத் தவறிவிட்டது. வடக்கு மக்களை ஐக்கிய தேசியக் கட்சி ஏமாற்றிவிட்டது. தெற்கு மக்களை நாடு பிரிபடப் போகின்றது என்று சொல்லி அவர்களிடத்தில் வெறுப்புணர்வை வளரச் செய்துவிட்டார்கள். இந்தப் பாவங்களுக்கு நான் பொறுப்பல்ல. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 25

## உறவுகள் எங்கே? கதறியழுத மக்கள்



யாழ்ப்பாணம், ஓக. 31
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பன்னாட்டுத் தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்தப் போராட்டங்களை 07

## நிறைவேற்று அதிகார முறைமை வேண்டாம்

### அரச தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படவேண்டும். இதனை நாடாளுமன்றமே செய்யவேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அரச தலைவர் தேர்தல் 07

## 45 நாள்களுக்குள் காணிகளை விடுவிக்க ஆவன செய்வேன்

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக். 31
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் அரச தலைவர் கூறியதற்கு அமைவாக வரும் 45 நாள்களுக்குள் காணிகளை விடுவிக்க என்னாலான 25

## மைத்திரியின் கண்களில் பட்டதால் 7 பட்டதாரிகளுக்கு அரச வேலை

யாழ்ப்பாணம், ஓக. 31
அரச வேலைக்குள் தங்களையும் உள்வாங்க வேண்டும் என்று கோரி யாழ்ப்பாணத்தில் ஏராளமான பட்டதாரிகள் ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அரச தலைவர் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 27 நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்

## பூராடம்

தனுசு ராசியில் அமையும் மற்றொரு நட்சத்திரம் பூராடம். 'பூர்வாஷாடா' என்றும் அழைக்கப்ப டும் பூராடம்! இரண்டு நட்சத்திரங்கள் சேர்ந்தது.

**பொதுவான குணங்கள்:** பூராடத்தில் பிறந்த வர்கள் நல்ல புத்திமான்கள். பொறுமை யாக இருந்து காரியத்தை சாதிக்கும் வல்லமை உள்ளவர்கள். எடுப்பான தோற்றம் உள்ள வர்கள். சாமர்த்திய சாலிகள். எதையும் கூர்ந்து கவனித்து, ஆராய்ந்து முடிவெடுப்பவர்கள். இவர்களால் தோல்வியைத் தாங்க முடியாது. எனவே, தோல்வி நேராதவண்ணம் திட்ட மிட்டுச் செயலாற்றும் இவர்கள், மற்றவருக்கும் வழிகாட்டியாகத் திகழ்வார்கள்.

**பூராடம் நட்சத்திரம் முதல் பாதம்:**
பூராடம் முதல் பாத - அதிபதி - சூரியன். அயராத தன்னம்பிக்கை இவர்களின் பலம். எதையும் தான் செய்தால் மட்டுமே சரியாக இருக்கும் என நம்புபவர்கள். அதற்கேற்ப, எதையும் குறை யின்றி, தவ றின்றி முழுமை யாகச் செய்து முடிக்க விரும்புவார்கள். உழைப்பாளிகள். நியாயம், நேர்மை உள்ளவர்கள்.

**பூராடம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:**
இதன் அதிபதி புதன். இரக்க குணமும், பிறருக்கு உதவும் மனமும் இவர்களின் தனிச்சிறப்பு. இறை வழிபாட்டில் ஈடுபாடு உள்ளவர்கள். இனிமையான பேச்சு, கவர்ச்சியான தோற்றம் கொண்ட வர்கள். சகல சௌபாக்கியங்களும் இவர்களுக்குக் கிடைக்கும்.

**பூராடம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** இதன் அதிபதி சுக்கிரன். ஆசை, பாசம், கோபதாபம், விரும்பியதை அடைய நினைக்கும் ஆவேசம் - பிடிவாதம் ஆகியவை இவர்களது குணங்கள். சில தருணங்களில், இவர்களின் இந்த இயல்புகளே வெற்றிக்கு அடிகோலும்.

**பூராடம் நட்சத்திரம் நான்காம் பாதம்:** இதன் அதிபதி செவ்வாய். கோபமும் ஆவேசமும் உள்ளவர்கள். பிறரை அடக்கி ஆள விரும்புபவர்கள். தலைமைப் பண்பு மிகுந்திருக்கும். எப்போதும் தங்களின் தனித்தன்மையை நிலைநாட்டுவதற்காக, பிறரை எளிதில் தங்களுடன் பழக விடமாட்டார்கள்.



## மூலம்

அமர்ந்திருக்கும் சிங்கத்தைப்போல் தோற்றமளிக்கும் ஐந்து நட்சத்திரங்களின் கூட்டம் இது. தனுசு ராசியில் பூரண நட்சத்திரமாக இது அமைகிறது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களிடம் சிங்கத்தின் இயல்புகள் இருக்கும்.

**பொதுவான குணங்கள்:** தனுசு ராசியில் குருவை அதிபதியாகக் கொண்டவர்கள். அறிவையும் புகழையும் பெற பெரிதும் முயற்சிப்பார்கள். கொள்கைப் பிடிப்பு உள்ளவர்கள், நல்லவர்கள், வல்லவர்கள். அதேநேரம் கர்வமும் மிகுந்திருக்கும். போராடுவதற்குத் தயங்காதவர்கள். இந்த நட்சத்திரத்துக்கு உரிய பறவை சக்ரவாக பக்ஷி. ஆதலால், இவர்களுக்கு இசையிலும் மற்ற கலைகளிலும் நாட்டம் இருக்கும். 'யானைக்கு வாலாக இருப்பதைவிடவும் ஈக்கு தலையாக இருப்பது மேல்' எனும் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்.

**மூலம் நட்சத்திரம் முதல் பாதம்:** செவ்வாய் இதன் அதிபதி. சுதந்திரமா னவர்கள். நினைத்ததைச் செய்து முடிக்க விரும்புபவர்கள், பாசமுள்ளவர்கள், வாக்கைக் காப்பாற்றுபவர்கள், பிடிவாதமும் கோபமும் உள்ளவர்கள், உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள்.

**மூலம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:**
இதன் அதிபதி சுக்கிரன். எல்லாவற்றுக்கும் ஆசைப் படுபவர்கள். வீடு, வாகன, யோகம் உள்ளவர்கள். குடும்பத்தில் பற்றுள்ளவர்கள். சொன்னதைச் செய் பவர்கள். செய்ய முடிந்ததை மட்டுமே சொல்பவர்கள்.

**மூலம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** இதன் அதிபதி புதன். அறிவாளி, திறமைசாலிகள். ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் செய்து பொருளீட்டுபவர்கள். நட்பு, காதல், பாசம் போன்ற சிறப்பான குணங்கள் இவர்களிடம் இருக்கும். எதற்கும் அஞ்சாத போராளிகள்.

**மூலம் நட்சத்திரம் நான்காம் பாதம்:**
இதன் அதிபதி சந்திரன். தலைமை தாங்கும் குணம் உண்டு. உயர் பதவி மற்றும் பொருளீட்டுவதில் ஆசை இருக்கும். அனைவரையும் நேசிப்பவர்கள். நல்ல நண்பராகத் திகழும் இவர்கள் நேர்மையான எதிரியாகவும் திகழ்வார்கள்.

## தியானம் செய்யும்போது பின்பற்றவேண்டிய சில விடயங்கள்



எம்முடைய சில உடல் குறைபாடுகளுக்கு தியானம் தான் மிகச் சிறந்த தீர்வாக அமைகிறது. நாம் எந்த வயதில் வேண்டுமானாலும் தியானம் செய்யலாம். தினமும் சுமார் 20 நிமிடங்கள் தியானம் செய்து வந்தால் எம் உடலும் மனமும் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும்.

முதலில் நாம் தியானம் செய்வதற்குச் சரியான நேரத்தை ஒதுக்க வேண்டும். பெரும்பாலும் அதிகாலை நேரமே தியானத்துக்கு உகந்த நேரமாகும். காலையில் முடியாதவர்கள், மாலை நேரத்தில் தியானம் செய்யலாம். தினமும் ஒரே நேரத்தில் தியானத்தை மேற்கொள்வது நல்லது.

தியானம் செய்வதற்கான பொருத்தமான இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அமைதியான சூழ்நிலையில் தியானத்துக்கான வசதியுடன் அவ்விடம் இருக்க வேண்டும். பொதுவாக, சத்தம் குறைந்த இடமாக இருக்க வேண்டும்.

தியானம் செய்யும்போது வயிறு ஒன்றுமில்லாமல் இருக்க வேண்டும். சாப்பிட்டுவிட்டு தியானம் செய்தால் சில சமயம் தூங்கி விடுவீர்கள். அப்படியே சாப்பிட்டாலும், இரண்டு மணி நேரம் கழித்து தியானம் செய்யலாம்.

தியானம் செய்ய ஆரம்பிக்கும் முன் இலேசான உடைகளை அணிந்து கொள்ள வேண்டும். உட்கார்ந்து தியானம் செய்ய ஒரு குட்டிப் பாயை விரித்துக் கொள்ள வேண்டும். சம்மணம் போட்டு உட்கார்ந்து, முழங்கால்களின் மேல் கைகளை வைத்துக் கொள்ள வேண்டும். முதுகெலும்பு நேராக இருக்குமாறு உட்கார்ந்து, கழுத்தை ரிலாக்ஸ் செய்து கொள்ள வேண்டும். பின், கண்களை மூடி ஓரிரு மூச்சுக்களை மூக்கு மூலம் மட்டும் இழுத்து விட வேண்டும்.

தியானத்தில் அமரும்போது அதில் மட்டுமே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். மூடிய கண்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் தேவையில்லாமல் திறக்க [illegible] மூடிய பார்வையை நிலை நிறுத்துங்கள். [illegible] மீறிய ஒரு ஆற்றலை நினைத்துக் கொண்டு தியானத்தைத் தொடங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்

**மேடம்:** பணிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். அனுபவசாலியின் ஆலோசனை நம்பிக்கைதரும். தொழில், வியாபாரத்தில் அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது.

**இடபம்:** நிகழ்வு மாறுபட்ட தன்மையில் இருக்கும். உங்களிடம் பழகுகிற நல்லவரையும், தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியா பாரத்தில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**மிதுனம்:** தனித்திறமைகளை வளர்த்துக்கொள்வீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து உருவாகும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** தொடர்பில்லாத பணி ஒன்று குறுக்கிட்டுசிரமம் தரலாம். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க அதிக உழைப்பு தேவைப்படும்.

**சிம்மம்:** நண்பரிடம் முன்னர் கேட்ட உதவி கிடைக்கும். மனதில் புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி சிறப்பாக முன்னேற்றம் பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கன்னி:** இன்று, தேவையற்ற சிந்தனை மனதில் உருவாகலாம். சுற்றுப்புற சூழ்நிலை உணர்ந்து செயல்படவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிர்மறையாக பேசுபவரிடமும் நல்அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் அணுகுமுறை மாற்றம் நற்பலன் தரும். விலகிச் சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும்.

**தனுசு:** உங்களின் யதார்த்த பேச்சு, சிலர் மனதை சங்கடப்படுத்தலாம். எதிர்வரும் பணிகளுக்கு, முன்னேற்பாடு அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி, தொந்தரவு தரலாம்.

**மகரம்:** நிகழ்வுகளை பார்த்து, மனதில் அதிருப்தி கொள்வீர்கள். நிலுவைப் பணி உங்களை, விரைவாக செயற்பட வைக்கும். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணிபுரிவீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** உங்கள் மனதில் உருவான திட்டம், செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பணிகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

# மோசடி வழக்கில் நடிகர் கவின் குடும்பத்தினருக்கு 5 ஆண்டுச் சிறை!



சீட்டு நிறுவனம் நடத்தி பண மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் 'பிக்பாஸ்'போட்டியாளர்,சின்னத்திரை நடிகர், உதவி இயக்குநர் கவினின் தாய், சகோதரி, அண்ணிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருச்சி கே.கே. நகர்ப் பகுதியைச் சேர்ந்த கவினின் தாயார் தமயந்தி. இவருக்கு கவின் தவிர சொர்ணராஜன் என்கிற மகனும், ராஜலட்சுமி என்றமகளும்உள்ளனர். சொர்ணராஜனுக்கு திருமணமாகி ராணி என்ற மனைவி இருக்கிறார்.

ராஜலட்சுமிக்கும் திருமணமாகி விட்டது. அவரது கணவர் பெயர் அருணகிரி.

அனைவரும் கூட்டுக்குடும்பமாக உள்ளனர். தமயந்தியின் கணவர் அருணகிரிமற்றும்மகன்சொர்ணராஜன் உள்ளிட்ட குடும்பத்தார் அந்தப் பகுதியில் சீட்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வந்துள்ளனர். இதற்கு முறையான அனுமதிபெறவில்லைஎன்று கூறப்படு கிறது. சீட்டு நிறுவனத்தை 1998 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம்ஆண்டுவரைநடத்தியுள்ளனர். பின்னர் திடீரென மூடிவிட, சீட்டு பணம் கட்டிய 34 பேர் தங்களுக்கு பணம் தராமல் மோசடி செய்துவிட்டார்கள் என ரூ 32 லட்சத்து 28 ஆயிரம்ரூபாய்பணத்தைதிருப்பிக்கேட்டு, கடந்த 2007 ஆம் ஆண்டு திருச்சி பொருளாதார குற்றத்தடுப்புப்பிரிவில் 34 பேரும் முறைப்பாடு அளித்தனர். விசாரணை நடத்திய பொலிஸார் திருச்சி தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தனர். வழக்குதொடர்ந்துஇடம் பெற்று வந்த நிலையில் குற்றம் சாட்டப்பட்ட சொர்ணராஜன் மற்றும்அருணகிரி ஆகியோர் இடையில் இறந்தனர். மற்ற 3 பேர் மீது வழக்கு இடம் பெற்று வந்தது. இந்த நிலையில் நேற்றுதீர்ப்பளிக்கப்பட்டது.

குற்றம்நிரூபிக்கப்பட்டதால்கவினின் தாயார் தமயந்தி, அண்ணி ராணி மற்றும் சகோதரி ராஜலட்சுமி ஆகியோருக்குமோசடிவழக்கில்5வருடச் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் தண்டமும், சீட்டு நிதியங்கள் சட்டத்தின்படிஇரண்டுவருடச்சிறைத் தண்டனையும் 2 ஆயிரம் ரூபாய் தண்டமும், சிறைத் தண்டனையை ஏககாலத்தில்அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.


அத கோடிபதி
அද කෝටිපති ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 716
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.08.30
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 84,865,860/-
SEASON
வெற்றி இலக்கங்கள்: 32 48 73 74 K
விசேட வெற்றி இல. 9757
அபிவிருத்தி லொத்தர் சபை
0114 825 825

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1031
சீட்டிழுப்பு திகதி 2019.08.29 வியாழக்கிழமை
I 02 18 32 36
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 73,229,612/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 30.08.2019 | 2602 | கருநீலம் |

இடபம்
வெற்றி இலக்கங்கள்: 34 42 46 61
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,581,764/=
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 5026
ரூ.100 பரிசுக்காக 616
31.08.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 275
சீட்டிழுப்பு திகதி 30.08.2019 சிகப்பு
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| O | 02 14 64 | 09 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 43,260,160/=
04.09.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

இப்பொழுது திரையில்

வடக்கு மற்றும் கிழக்கு திரையரங்குகளில்
| | |
|---|---|
| மஜஸ்ரிக் சிற்றி சினிபிலெக்ஸ் யாழ்ப்பாணம் | ராஜா யாழ்ப்பாணம் |
| செல்லா யாழ்ப்பாணம் | சாரு பருத்தித்துறை |
| விஜயா மட்டக்களப்பு | கிவேஷ் மன்னார் |
| சரஸ்வதி திருகோணமலை | நெல்சன் திருகோணமலை |
| செல்லம் செங்கலடி | பாலா சாவகச்சேரி |
| வசந்தி வவுனியா | வெலிங்ரன் கந்தளாய் |
| அர்ச்சனா அக்கரைப்பற்று | GK சினிமா கல்முனை |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்
Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)


## அறிவித்தல்



Adrian Solar Green (Pvt) Ltd எனும் எமது நிறுவனத்தில் சந்தைப் படுத்தல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய **அருளானந்தம் சாம்ஷன்** என்பவர் 29.08.2019 ஆம் திகதி முதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவர் 29.08.2019 ஆம் திகதியில் இருந்து எவ்வகையிலும் எமது நிறுவனத்தை பிரகடனப்படுத்தவோ நிறுவனம் சார்பான எந்தவொரு நடைமுறையிலும் ஈடுபடவோ முடியாது என்பதையும் மேற்கொண்டு இவருடன் தொழில் ரீதியான தொடர்புகளின் ஊடாக வரக்கூடிய எந்தவொரு பிரச்சினைகளுக்கும் எமது நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது என்பதனையும் அறியத் தருகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க:-
011 236 1636, 021 222 0091/92, 077 711 8540
முகவரி:- Adrian Solar Green (Pvt) LTd
360/4,St.Martin's Trade Center, Main Street, Jaffna, Sri Lanka


உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

புதிய யுகத்துக்கான
ஊடகப் பயணத்துக்கு நீங்கள் தயாரா???




"ஊடக ஆளுமைகளுக்கான தேடல்"
[ செயலமர்வும் வேலைவாய்ப்பும் ]
பயிற்சியும், சர்வதேசத் தரம் வாய்ந்த சான்றிதழும், உடன் வேலைவாய்ப்பும் உங்களுக்காக!

ஆர்வமுள்ளோர் 10.09.2019 க்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ விண்ணப்பியுங்கள்.


ஊடக ஆளுமைகளுக்கான தேடல்
"உதயன்"
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
: tamilsmartmedia@gmail.com

MASSIVE VEHICLES AUCTION SALE



04th of September
LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM
VAVUNIYA
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81
On View – 02nd & 03rd September
(Please refer the Udayan On 02nd of September 2019 For the Full List Of Vehicles)
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.
Head Office & Showroom: 24, Torrington Road, Kandy. Tel: 081 2227693, Fax: 081 2224371 Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom: No.6A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502080, 2585408, Tel-Fax: 011 2588176 Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நொறுக் மொறுக் பொரி உருண்டை

புதிது புதிதாக நொறுக்குத்தீனிகள் எல்லாம் இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது போல் பலரும் சொல்கிறார்கள். ஆனால் நமது முன்னோர்கள் விதவிதமான நொறுக்குத்தீனிகளைச் செய்வதில் வல்லவர்கள்.

சத்துமிக்க பொருள்களிலிருந்து அவர்கள் செய்த பலகாரங்கள் எல்லாமே பளபளவென்ற பெயரில் இப்போது மீண்டும் பிறப்பெடுத்திருக்கிறது. கிராமியப் பலகாரங்கள் என்று சொல்லப்பட்ட கருப்பட்டி, வெல்ல பலகாரங்கள் எல்லாம் இன்று நீரிழிவுகாரர்களுக்கும் ஏற்றது என்று சொல்லப்பட்டதால் அனைவரது பார்வையும் பழங்கால உணவுப் பொருள்களின்மீது திரும்பி இருக்கிறது. பெரியவர்கள் மட்டுமல்ல சிறியவர்களையும் திசைதிருப்பியிருக்கிறது.

பொரி என்றாலே புண்ணிய ஆலயங்களுக்கு சென்று வரும் போது பிரசாதம் கொடுக்கப் பயன்படுத்தும் பொருள் என்ற எண்ணங்கள் வேரூன்றத் தொடங்கிய நேரம் கிராமங்களைத் தாண்டி இன்று நகரங்களையும் ஆக்கிரமித்துவருகிறது பொரி உருண்டை. எவ்வளவு சாப்பிட்டாலும் வயிற்றுக்கு வஞ்சனம் செய்யாமல் இருப்பதால் இதன்மீது அலாதி பிரியம் நம் முன்னோர்களுக்கு இருந்தது. இரும்புச்சத்துகொண்ட வெல்லமும்,சத்தான பொரியும் இணைந்து வளரும் குழந்தைகளின் சத்துக்களைக்குறையாமல் அதிகரிக்கவே செய்யும். விலை கொடுத்து வாங்கும் மதிப்புமிக்க பீட்ஸாவில் இல்லாத சத்து மலிவு விலையில் வாங்கக்கூடிய எளிமையான பொரி உருண்டை கொடுத்துவிடுகிறது என்ற விழிப்புணர்வை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். கடைகளில் மசாலா பொரியைப் பார்த்ததும் மக்களுக்குப் பொரியின் மீது ஆசை திரும்பி யிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

பொரிஉருண்டை செய்ய கடைகளைத்தேடி ஓட வேண்டியதில்லை. எளிமையான முறையில் வீட்டிலேயே தயாரிக்கலாம். அதுவும் 15 நிமிடங்களில். எப்படி செய்வது என்று பார்க்கலாமா?

**தேவையான பொருள்கள்:**

பொரி 5 கப்,வெல்லம் ஒன்றரை கப்,
தண்ணீர் - கால் டம்ளர் பச்சரிசி மாவு 3 டீஸ்பூன்.

**செய்முறை:**

அகன்ற பாத்திரத்தில் கால் டம்பளர் தண்ணீர் விட்டு வெல்லத்தைத் துருவி சேர்த்து பாகுபதம் காய்ச்ச வேண்டும். அடுப்பை மிதமான தீயில் வைத்து பொரியைக் கொட்டியபடி நன்றாக கலக்க வேண்டும். பொரி முழுவதும் வெல்லப்பாகு கலந்து உருண்டுவரும். அப்போது அரிசி மாவைத்தூவி உருண்டைகளாகப் பிடிக்கவும். தேவையெனில் 2 டீஸ்பூன் நெய் விடலாம்.

குழந்தைகளுக்குப் பாடசாலையில் கொடுப்பதற்குக் கடைகளில் ஸ்நாக்ஸ் வாங்கி கொடுப்பதைவிட வீட்டிலேயே ஸ்நாக்ஸ் செய்து கொடுப்பது ஆரோக்கியமானது. அதிலும் எளிமையாக செய்யக்கூடிய சத்துமிக்க இந்தப் பொரி உருண்டைகளைக் குழந்தைகள் மறுக்காமல் நொறுங்கித் தின்னும் அழகை பார்ப்பதற்கே இன்னும் இன்னும் செய்யலாம் என்று தோன்றும்.

# வயிற்றில் இருக்கும் குழந்தையை குண்டாக்கும் கர்ப்பகால நீரிழிவு



நீரிழிவு பிரச்சினை, இன்றைய காலசூழலில் மிகப்பெரிய ஆபத்தாக மாறிவிட்டது. நமது உணவுப் பழக்கத்தில் ஏற்பட்டுள்ள அதிக மோசமான மாற்றங்களே இந்த நீரிழிவுக்குக் காரணமாக இருக்கின்றன. இந்த கோளாறு கருவில் இருக்கும் குழந்தையும் விட்டு வைப்பதில்லை.

ஆனால் கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் நீரிழிவு தாற்காலிகமானதாகவும், கர்ப்பம் தரித்த பிறகு ஏற்படக்கூடியதாக இருக்கும். அதாவது குழந்தையின் வளர்ச்சியின்போது உருவாகும் நஞ்சுப்பையில் இருந்து சுரக்கும் சில ஹார்மோன்களின் காரணமாக, இன்சுலின் சுரப்பி சரியாக சுரக்காமல் போவதால் நீரிழிவு பிரச்சினை உண்டாகும். இந்த நீரிழிவு பொதுவாக கர்ப்பகாலத்தின் ஆறு மாதத்திலிருந்து இறுதி மாதம் வரையே அதிகமாக வருகிறது என மருத்துவ ஆய்வுகள் சொல்கின்றன.

**நீரிழிவினால் ஏற்படும் ஆபத்துக்கள் :**

கர்ப்ப காலத்தில் ஏற்படும் தாற்காலிகமானதாகக் கருத்தப்பட்டாலும், இந்த நீரிழிவின் காரணமாக வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஆபத்து ஏற்படலாம். அதாவது தாயின் உடலில் உள்ள இன்சுலின் சரியாக வேலை செய்யாததால், இதனை கட்டுக்குள் வைக்க வேண்டிய குளுக்கோஸ் அளவுகள், தாயின் குருதியில் அதிகமாகும்.

இவ்வாறு தாயின் குருதியில் சுரக்கும் அதிகப்படியான குளுக்கோஸ்,நஞ்சுக்கொடி வழியாக குழந்தையின் உடலுக்குள் சென்று குழந்தையின் உடலில் சேர்க்கிறது. இதனைச் சரிசெய்ய குழந்தையின் கணையம் அதிக அளவில் இன்சுலினை சுரக்கும்.

இதனால் குழந்தை அளவுக்கும் அதிகமான எடையுடன் சுமார் 5 கிலோவரை எடை கூட கூடும். இதனால் குழந்தை பிறப்பில் பிரச்சினை ஏற்படும். அதோடு சுவாசம் சார்ந்த பிரச்சினை, கணைய பிரச்சினை இவற்றின் பாதிப்புக்களால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவினால், பிறக்கும் குழந்தை குறைவான குருதி சர்க்கரையால் மரணத்தை சந்திக்கும் வாய்ப்புகள் அதிகம்.

முறையான மருத்துவப் பரிசோதனையின் மூலம் தாயின் குருதி சர்க்கரையைக் கட்டுக்குள் வைத்து, குழந்தையின் உயிரை காக்க முடியும். கட்டாயம் கர்ப்பகாலத்தில் முறையான மருத்துவ ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்.

# அத்திக்காய் இருக்க

## வாய்ப்புண்ணாவது வயிற்றுப்புண்ணாவது...



"கண்டு காய் காய்க்கும் காணாமல் பூ பூக்கும்" என்று அத்திக்காய் குறித்த பழமொழி ஒன்று உண்டு. பாதுகாப்பான பக்க விளைவில்லாத சிறந்த மருத்துவக் குணமுள்ள உணவாக அத்திக்காயை சொல்லலாம். நேரத்துக்கு உணவு எடுத்துக்கொள்ளாமல் அவசரத்தில் கிடைத்ததை உண்டு சாப்பிட்டு செல்வோர்கள் தங்களையும் அறியாமல் அல்சருக்கு அடித்தளம் அமைக்கிறார்கள்.

குடல்களின் இயக்கம் சீரற்று வயிற்றில் புண்ணை உண்டாக்கினாலும் வாய்ப்புண் வந்தபிறகே நோயின் தீவிரத்தை உணர்கிறோம்.

அதனால்தான் நோய் வரும் முன்பே மருத்துவக் குணமுள்ள உணவுகளையும் அவ்வபோது சேர்த்து வரவேண்டும் என்று கூறியதோடு, அதைக் கடைப்பிடித்தும் வந்தார்கள் நம் முன்னோர்கள். அவற்றில் ஒன்று, இன்று மருத்துவர்களாலும் ஒப்புக் கொண்டு சிறந்த மருத்துவ உணவாக பரிந்துரைக் கப்படுவது அத்திக்காய்.

அத்தி மரப்பட்டை, வேர், அத்திக்காய், அத்திப்பழம், உலர் அத்திப்பழம் என எல்லாமே சிறந்த மருத்துவக் குணங்களை உள்ளடக் கியுள்ளதை மருத்துவத்துறை ஒப்புகொண்டுள்ளது. மாதம் ஒருமுறை அத்திக்காயை வைத்து, கூட்டு பொரியல் வைத்து சாப்பிட்டால் வாய் வேகாளம், வாய் எரிச்சல், வாய்ப்புண்ணை நிரந்தர மாக, குணமாக்குவதோடு வயிற்றுப்புண்ணையும் சரி செய்யும் வல்லமை அத்திக்காய்க்கு உண்டு.

**அத்திக்காய் கூட்டு**
**எப்படிச் செய்வது என்று பார்க்கலாமா?**

அத்திக்காய் - 200 கிராம்
தேங்காய் -அரைமூடி
கடலைப்பருப்பு, துவரம்பருப்பு - தலா அரை டம்பளர்,
பொடியாக நறுக்கிய வெங்காயம் 1 கப்,
தக்காளி - அரை கப்,
இஞ்சி பூண்டு விழுது - 2 டீஸ்பூன்,
சீரகம் 3 டீஸ்பூன்,

**தாளிக்க தேவையான பொருள்கள்:**

கடுகு 1 டீஸ்பூன்,
வெந்தயம், உ.பருப்பு, சீரகம் - தலா 1 டீஸ்பூன்
வரமிளகாய் 3
உப்பு, எண்ணெய், கறிவேப்பிலை - தேவைக்கேற்ப.

**செய்முறை:**

அத்திக்காயைத் தண்ணீரில் வேகவைத்து இறக்கும் போது சிட்டிகை மஞ்சள்தூள், கல் உப்பு சேர்த்து நீரை வடித்து நசுக்கி கொள்ளவும். மிக்ஸியில் அரைக்க வேண்டாம்.

கீரை மசியலுக்கு பயன்படுத்தும் மத்து இருந்தால் கூட இலேசாக இடித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர்பகிர்கின்றோம்

**K.S.சற்குணசீலன்**
(தும்மலை, இளவாலை)



இளவாலை பிரதேச வைத்தியசாலை பற்சிகிச்சைக் கூடத்திற்கான நடைபாதையை தனது மனைவி அமரர் **திருமதி Dr ச.சகுந்தலாதேவி** அவர்களின் நினைவாக அமைத்துத்தந்த **K.S. சற்குணசீலன் (U.K)** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்புடன் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நோயாளர் நலன்புரிச்சங்கம்**
**பிரதேச வைத்தியசாலை, இளவாலை.**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்...



மலர்வு 20 . 07 . 1937

உதிர்வு 10 . 09 . 2018

திருமதி
**பசுபதி இராசம்மா**

திதி : பிரதமை 31.08.2019

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
எம் மனதைவிட்டு
மாறாது உங்கள் நினைவுகள்

பட்டினசபை வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.

(05570)(04.17)

## மாபெரும் மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து இறக்குமதியான லட்சுமி சுதா, சாண்டில்யன், சிவபாரதி, ஓஷோ, இந்திராசௌந்தர்ராஜன், கண்ணதாசன், கல்கி, ரமணிச்சந்திரன் , சுஜாதா, ராஜேஸ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், அமுதவல்லி கல்யாணசுந்தரம், காஞ்சனா ஜெயதிலகர், ஜெய்சக்தி, ஆர்.சுமதி ஆகியோரின் இனிமையான கதைகள் நிறைந்த புத்தகங்கள் இந்தியன் விலைப்படி 3.50 ஆல் பெருக்கப்பட்டு 10% தொடக்கம் 50% வரையான விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**இல.212,214, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக அரச அதிபர் அலுவலகத்தில் அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றும் **த.தங்கேஸ்வரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**தம்பிராசா மகேஸ்வரி**

அவர்கள் நேற்று (30.08.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(IN/11117)(11.17)

## 20ஆவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு 07.01.1977

உதிர்வு 10.09.1999

செல்வன்
**குணசிங்கம் ஞானேந்திரன்**
(கண்ணா)

(உரிமையாளர், கோபிகா ஆடையகம், யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகனின் பூங்காவன நன்னாளிலே
தொட்டால் மணக்கும் ஜவ்வது போல்
எம்மில் முழுதும் மணம் வீசி
சிட்டாய்ப்பறந்து எம் நெஞ்சில் நிறைந்து
ஒளி வீசி நின்ற ஞானேந்திரனே!
இருபதாவது ஆண்டும் வந்ததோ?
எண்ணி நிதம் ஏங்குகின்றோம் கண்ணா!

40/6, புகையிரத
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
கோபிகா ஆடையகம்
ஊழியர்கள்.



## விற்பனைக்கு

Mahindra bolero cob ரக வாகனம் (PU - XXXX) விற்பனைக்குண்டு

**076 121 7373**

## தேவை

**களஞ்சியக்காப்பாளர் தேவை**

கணினி அறிவுள்ளவர், சாரதி அனுமதிப்பத்திரத்துடன் விரும்பத்தக்கது. பொதி செய்வதற்கு பெண்கள் தேவை. மதிய உணவு வழங்கப்படும்

**075 978 9223, 021 205 2200**

**ES Printers**

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



**021 492 7471,**
**021 492 7472**

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## அமரர் சுப்பையா இராசையா (சின்ராசா)அவர்கள்



மண்ணில் 05.02.1926

விண்ணில் 27.08.2019

சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசையா அவர்கள் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, அன்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலக்ஷ்மியின் அன்புக்கணவரும் லலிதாதேவி (Norway) , தயாநிதி, முருகானந்தன் (Norway) , சிவானந்தன் (Norway), ஜெயநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவகுமார், சந்திரமௌலீசன் (ஓய்வு பெற்ற பகுதிநிலை மேற்பார்வையாளர் ST. John's College, Jaffna), சிவானி, யோகநாயகி, கிரிஷான் (Accounts Executive, Tokyo Cement group, Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் , தீபனா, தர்ஷனா, சாரங்கன், சிவமைந்தன் (மருத்துவபீட மாணவன்-Belorus), கௌரிபாலன்(மருத்துவபீட மாணவன்- யாழ்ப்பாணம்), மிஷெல்லா, மிஷானா, யுவன், ஆதிரையான், சந்தோஷ், கவிஷன்(ST John's College மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தங்கம்மா, நடராசா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நேசமலர், ஞானமலர், பரமசிவம், சிவராஜலிங்கம், பரமேஸ்வரி, சிவயோகராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு இல-117, கோவில் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

CS24009(16/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**முகவரி**
**இல-117,கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு:**
**077 154 0436 ,021 221 6184**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கைதடியில் உள்ள

**Food City**

ஒன்றிற்கும் அத்தோடு வெளிநாட்டில் இருந்து வரும் பொருள்களை உரியவரிடம் ஒப்படைப்பதற்கும்
19 - 25 வயதுக்கு உட்பட்ட பெண் தேவை.

**077 526 2370**

## பெயர்மாற்றம்

முதலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த **வடிவேல் செல்வகுமாரன்** ஆகிய நான் இன்றிலிருந்து (31.08.2019) எனது பெயரை **வடிவேல் செல்வகுமார்** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- வடிவேல் செல்வகுமார் -**

## மணி விழா வாழ்த்து



**மனிதனாய் மிளிர்ந்தாய்
உன் பணி சிறக்க.....**

### மாணிக்கலிங்கம் திருலிங்கம்

(யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி. உப அதிபர்)

*திரு,
நீ ஒரு மனிதனாய் இருந்தாய்
பல்கலை வாழ்விலும் பாடசாலை வாழ்விலும்
நீ மிளிர்ந்தாய்
மனித விடுதலைக்காய் படிக்கும் காலத்திலும்
நீ முயன்றாய்,
என்றும் உனக்கொரு பரம்பரை உண்டு
அது மாணவர் பரம்பரை, நண்பர்கள் பரம்பரை*

*எல்லாவற்றையும் தாண்டி
நீ நண்பர்களை இணைத்தாய்
என்றும் நாம் உன்னோடு
நீ சொன்னால் நாம் திரள்வோம்
என்றும் புனிதனாய் மனிதனாய்
நீ வாழ்கிறாய்*

*அரச சேவையில் ஓய்வு ஒரு கட்டம்
இன்னொரு வாழ்வும் இனி உண்டு
அது – நீ மனிதத்தை உயர்த்த முயற்சிக்கும் வாழ்வு
உன் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும்
தேய்வில்லாமல் உன் பணி தொடரட்டும்.*

Congratulations

**பல்கலை நண்பர்கள் சார்பாக :**
**கு.மகிழ்ச்சிகரன், கி.சண்முகராசா, சி.ஞானசேகரம், க.நித்தியானந்தன்.**

(CS 27678) (14.17)

## மரண அறிவித்தல்



### முருகேசு இலட்சுமி

நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கணுக்கை, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு - இலட்சுமி 28.08.2019 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயங்கன் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிட்டிணன் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் முருகேசுவின் அன்பு மனைவியும் பேரானந்தன் (ஜேர்மனி), செல்வானந்தன், சுகந்தி, அனுசா (நெதர்லாந்து), பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவமலர் (ஜேர்மனி), வரதராணி, திருச்சந்திரன், ரவீந்திரன் (நெதர்லாந்து), நந்தாவனம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2019) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

(CS 27700) (14.17)

**தீபன் (மகன்) - 077 602 9454**

## மரண அறிவித்தல்

### இரத்தினம் கணேசலிங்கம் (மாம்பழம்)

(ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பருத்தித்துறை பிரதேச நிர்வாக உறுப்பினர்)



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30.03.1967 | 28.08.2019 |

அல்வாய் வடக்கு, கொத்தலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கணேசலிங்கம் (மாம்பழம்) 28.08.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், நாமகள் வீதி, தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமனோகரியின் (கலா) பாசமிகு கணவரும், கனடாவில் வசிக்கும் நிஷானின் பாசமிகு தந்தையும், சிவயோகம் (லண்டன்), இந்திராணி, முருகேசு (கழுவன்), யோகராணி, கல்யாணி (கனடா), குணசேகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினகுமாரி (லண்டன்), வேல்மணி, உதயமலர், சந்திரராசா, ஜெயபாலன் (கனடா), ராதிகா (கனடா) மற்றும் உதயபிரபா, குகனந்தன் ரீற்றா, தயாபரன், வசந்தராசா, தயாநிதி, ஜெயரூபன், மதன் மயூரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.குமரன் (பொதுவைத்தியசாலை, திருகோணமலை), தனேஸ் (லண்டன்), சுஜித்தா, சுஜிந்தா, புகழரசி ஆகியோரின் சிறிய தந்தையும், ஆஷ்னா, ஆஸ்ரன், விந்துஷா, சிதுஷா, விதுஷங்கா, டிலக்ஷன் ஆகியோரின் பெரிய தந்தையும், தர்ஷன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக் கழகம்), தனுஷன் (ஆய்வுகூட உதவியாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), சோபிகா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், Hari Engineering), கென்சிகா (மாணவி கிழக்குப் பல்கலைக்கழகம்), நிதுர்ஷன், நிதுஷா, சோபனா (கனடா), ஜேஷன் (கனடா), ஜெனிலியா (கனடா), டன்ஸிகா மற்றும் Dr.பிரிய தர்ஷினி (பொது வைத்தியசாலை, திருகோணமலை), பபிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அர்ஜீன், ஆஷினி, அஷ்பிதா, அஷ்ரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (01.09.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"கல்யாணி வாசம்"**
**அல்வாய் வடக்கு, அல்வாய்.**

(ANE/952)(11.17)


தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 7716456**

## 2 ஆம் ஆண்டு நினைவேந்தல்

### அமரர் இராமு அருள்நேசன்

(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி – மன்னார், போதகர் கிறிஸ்தவ குடும்பசபை – யாழ்ப்பாணம்)



| மழலையாய் | மகிமையாய் |
| --- | --- |
| 25.08.1953 | 31.08.2017 |

கரம் பிடித்த நாள் முதலாய் கண்கலங்காது
கண் இமைபோல் காத்த என் தெய்வமே!
கண்ணியமாய் நான் வாழ கருத்தாய் காத்தவரே
கணப்பொழுதும் பிரியாமல் என்னோடு இருந்தவரே!
உரம் தந்த உங்கள் கரங்கள் உரமாகியதோ?
உங்கள் பிள்ளையும் நானும் பரிதவிக்க எங்கப்பா
போனீங்கள்?
எங்கள் அவலம் போக்க மீண்டும் உயிர்த்தெழுந்து
வாருங்கோ
உங்கள் வரவை வழிமேல் விழிவைத்துக்
காத்திருக்கும்

(CS 27673)(11.17)

**மனைவி, மகள்.**
200, [illegible], அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாள்கள் தேவை (Vacancy)

1. Civil Engineer
2. Civil Engineer Trainee
3. தொழில்நுட்ப அலுவலர் - TO
   - NVQ Level 4 or Equivalent with minimum - 1 year experience
4. Quantity Surveyor (Minimum 1 - year experience)
5. Quantity Surveyor Trainee.

Contact No: 075 918 3942 ( திங்கள் - சனி வரை 8.30am - 5.00 pm மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
**E-mail :- qualitybuilders19@hotmail.com**

(J/10558)(11.17)

## வேலையாள்கள் தேவை

### பணவசூலிப்பாளர்கள் தேவை.

### (Recovery Officer)

சம்பளம் 50, 000 - 80, 000 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இருப்பின் உடன் தொடர்புகொள்ளவும்.

**சுஜித் என்டப்பிறைசஸ்**
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
**077 904 1258, 021 227 0586**

# இந்தியாவில் இருந்து திரும்பிய ஐவர் பருத்தித்துறையில் கைது

யாழ்ப்பாணம், ஒக.31
இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்த 5 பேர் பருத்தித்துறைக் கடற்கரையில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடற்படையினர் வழங்கிய தகலுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டவர்களில் 3 ஆண்களும், 2 பெண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்தனர் என்றும், சட்டவிரோதமாக இலங்கை திரும்பியபோது கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-26)

## எறும்பு விடும் வாசனை!



வரிசை வரிசையாகச் செல்லும் எறும்பு களில் சில, அவ்வப்போது நின்று நிதானித்து விட்டு, மீண்டும் செல்வதை நீங்கள் பார்த்தி ருக்கலாம். இந்தத் தாமதம் எதற்காக? இவை இப்படித் தயங்கி மயங்கி நிற்கும் போது, மிக நுண்ணியதொரு வாசனையை விட்டுச் செல்கின்றன. பின்னால் வரும் எறும்புகள் இந்த வாசனையைப் பிடித்துக் கொண்டு, முன்னேறி தங்கள் கூடுகளை அடைகின்றன.

### நிறைவேற்று...

விரைவில் நடைபெறவுள்ள நிலையில், அரச தலைவர் முறைமை ஒழிப்புத் தொடர்பாக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்துரையாடியதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.
'நிறைவேற்று அரசதலைவர் முறைமை முற்றாக ஒழிக்கப்படவேண்டும். அதனை நாடாளுமன்றமே செய்ய வேண்டும். 4 ஆண்டுகளில் அவர்கள் அதனைச் செய்யவில்லை. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை' என்றார் - மைத்திரி. (ஓ.5)


### உறவுகள்...

ஏற்பாடு செய்திருந்தனர். அதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.
வவுனியா, மன்னார், கல்முனை ஆகிய இடங்களில் கவன வீர்ப்புக்கள் நடத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்க்ள் தமது உறவுகளை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறி அழுதமை நெஞ்சை நெருடும் வகையில் இருந்தது. தமது உறவுகளை வெளிப்படுத்த, விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
ஆட்சி மாற்றம் வருதற்கு முன்னர் எமது உறவுகளைத் தாருங்கள், ஆட்சி மாறினால் நாமும் காணாமல் போகக் கூடும் என்று அவர்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர். பன்னாடுகள் எமது பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும், விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.
இந்தக் கவனவீர்ப்புக்களின் முடிவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளருக்கான தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைத்தனர். (த)

(தொடர்புடைய செய்திகள் 12,13,14ஆம் பக்கங்களில்)

---

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
### ஆண்டுகள் பதின்மூன்று



அமரர்
**சுப்பிரமணியம் பசுபதி**

தோற்றம் 29.11.1935
மறைவு 26.08.2006

திதி: துதியை
31.08.2019 (சனிக்கிழமை)

ஆண்டுகள் பதின்மூன்று ஆனதுவோ அப்பா!
நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

'பசுபதியம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

CS7078(16/17)

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 30 |
| 07 | 08 |
| 1928 | 2019 |



### திருமதி நல்லம்மா நவரத்தினம்

கேணியடி கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா நவரத்தினம் நேற்று (30.08.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், நடராசா, பாக்கியம், கந்தையா, பவளம், வேலாயுதபிள்ளை, பரமேஸ்வரி, பழனி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, சிவஞானம், அருளம்மா, பொன்னுத்துரை, இரத்தினம்மா, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் தனபாலசிங்கம், சுசிலாதேவி (பாமா), காலஞ்சென்ற லலிதாதேவி (ரதி) மற்றும் கமலாதேவி (நிதி), காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் ராகினி (சத்தியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெகதீஸ்வரி காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, செல்வராசா மற்றும் வரதராசா, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் லக்ஸ்மன், கேதீஸ்வரதாஸ், தபோதினி, குமுதினி, குமுதாசினி, காலஞ்சென்ற குணராஜா மற்றும் கிருஸ்ணராஜ், ராஜேஸ்கண்ணா, விநோதினி, தயேஸ்வரன், திபேஸ்வரன், தஜீஸ்வரன், தயீசினி, சோபனா, கஜன், பிரதீனா, ஜந்துரிசா, கிருபாளினி, பிரபாளினி, திவியா, தர்ஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்
### வீரசிங்கம் நடராஜா



பிறப்பு 23.10.1935
இறப்பு 30.08.2019

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் நடராஜா (முன்னாள் புகையிரத லிகிதர்) (30.08.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவரான சி.வீரசிங்கம்- இராசமணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ந.லீலாவதியின் அன்புக் கணவரும் சரவணபவானந்தன் (கட்டிட படவரைஞர்), தவநேசன்(கிராம சேவையாளர்), ரவிதரன் (கதிரவன் ஜெம்ஸ் சென்ரர் உரிமையாளர்) சுபாஷினி (ஆசிரியை சரஸ்வதி மகாவித்தியாலயம்-கொழும்பு) ஆகியோரின் அன்புமிகு தந்தையும் கஸ்தூரி, வசந்தகுமாரி (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி), மகித்குமார் (ABANS, சீதுவை, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகதீஸ், மஞ்சரி, கிரிசிகா, காருண்யா, மயூரி, யதுமிதன் ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை நாளை ஞாயிற்றுக்கிழமை (01.09.2019) மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.525/1 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்
சரவணபவானந்தன்,
தவநேசன், ரவிதரன்

---

### செல்லத்துரை பொன்னையா (Dr.Pons)




யாழ்.கொடிகாமத்தைப்பிறப்பிடமாகவும் ஜேர்மனி Siegenயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பொன்னையா கடந்த (23.08.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கொடிகாமம் ஆயுள்வேத வைத்தியர் செல்லத்துரை வல்லவாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லூர் ஆயுள்வேத வைத்தியர் சீனிவாசகம் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிறிகமலாம்பிகாதேவியின் (பவா) பாசமிகு கணவரும் சர்மிளா (ஜேர்மனி), வாசுகி (டிலா-ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணன் (ஜேர்மனி), விபுலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சகானா, ரிஷிஆரியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தங்கலட்சுமி (இலங்கை), சிவகுருநாதன் (லண்டன்), கந்தசாமி (ஹொலண்ட்), வடிவாம்பிகை (இலங்கை), ஞானேஸ்வரி (இலங்கை), தில்லைநாதன் (லண்டன்), இந்திராதேவி (இலங்கை), லிங்கநாதன் (லண்டன்), மங்கையற்கரசி (மாலினி-இலங்கை), ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் மீனா, சித்திரா, கந்தசாமி, குணசேகரம், ஜெகசோதி காலஞ்சென்ற ஆனந்தராஜா மற்றும் ஜெயந்தி காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (ரவி) மற்றும் சிறிவாலாம்பிகாதேவி, சிறி விமலாம்பிகாதேவி, சிறி ரகுதேவன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சந்தானகோபால் மற்றும் அழகம்மா, விமலாதேவி (ரூபி), சந்திரா பாலகிருஸ்ணன், லகுசியாமா, ஆகியோரின் பாசமிகு சகலனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை சனிக்கிழமை (31.08.2019) காலை 10.00 மணியளவில் Peter & Schmidt GmbH Frankfurter str.201, 57074 Siegen. Germany எனும் விலாசத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் 077 618 3133

K.T.M Oil Mill Point pedro Road,
KaiviyanKadu, Jaffna, Srilanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# அநீதிகளை தட்டிக் கேட்கும் 'இந்தியன் -2'

கமல்ஹாசன் - ஷங்கர் இயக்கத்தில் பரபரப்பாகத் தயாராகிவருகிறது 'இந்தியன் 2' படம். ஊழலைத் தொடர்ந்து பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் துன்புறுத்துல்களை 'இந்தியன் 2' பேசப்போவதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

அதிக பொருள் செலவில் உருவாகிக்கொண்டிருக்கும் இந்தப் படத்தில் நடிக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. காஜல் அகர்வால், சித்தார்த், பிரியா பவானி சங்கர், ஐஸ்வர்யா ராஜேஷ், ரகுல் ப்ரீத் சிங் எனப் பல்வேறு நடிகர்கள் இதில் இணைந்திருந்தனர். எந்தக் காலத்துக்கும் பொருந்திப்போகும் ஊழல் பிரச்சினையைப் பற்றி 'இந்தியன்' முதல் பாகத்தில் பேசியிருந்தார் ஷங்கர். இதைத் தொடர்ந்து 2ஆம் பாகமான இதில், பெண்களுக்கு ஏற்படும் பாலியல் அவலங்களைப் பேசவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின.

மேலே சொன்ன நடிகர், நடிகைகள் மட்டுமல்லாமல் விவேக்கும் இந்தப் படக்குழுவில் அண்மையில் இணைந்தார். ஷங்கரின் இயக்கத்தில் ஏற்கனவே 'பாய்ஸ்', 'அந்நியன்', 'சிவாஜி' உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கிறார் விவேக். இந்த நிலையில், படத்தின் வில்லனாகத் தற்போது பாபி சிம்ஹா இணைந்துள்ளார். பாபி சிம்ஹாவே வில்லனாக நடிப்பது உறுதியாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.



## வாழ்க்கைப் பாடம்

ஒருநாள் ஒரு சின்ன பையன் தன் அம்மாவுடன் கடைக்கு போனான். அந்த கடைக்காரர் பையன் அழகா இருக்கானே என்று சொல்லிவிட்டு போத்தலில் இருந்து இனிப்பைக் காட்டி "எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோப்பா" என்றார்.

ஆனால் அந்த பையன் இனிப்பை எடுக்கவே இல்லை. கடைக்காரர் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் எடுக்கவில்லை. அதை பார்த்த அவன் அம்மா "இனிப்பை போத்தலில் இருந்து எடுத்துக்கோ" என்றார். அப்பவும் அவன் இனிப்பை எடுக்கவே இல்லை.

பிறகு அந்தக் கடைக்காரரே இனிப்பைஅள்ளி அவன் கைகளில் வைத்தார். அவன் ஆசையுடன் இரண்டு கைகளாலும் வாங்கிகொண்டான்.

வீட்டுக்குப் போனவுடன் அவன் அம்மா "ஏன் இனிப்பைப் போத்தலில் இருந்து நீயே எடுத்து கொள்ளவில்லை?" என்று கேட்டார்.

"அம்மா என் கையைப் பாருங்கள் எவ்வளவு சின்னதா இருக்குது. நானே போத்தலில் இருந்து எடுத்து இருந்தால் எனக்குக் கொஞ்சமாகத் தான் கிடைத்திருக்கும். இப்போது பாருங்கள். அவர் எடுத்துக் கொடுத்ததால் எவ்வளவு அதிகமாக இனிப்பு கிடைத்துள்ளது"- என்றான்.

எதையுமே நாமே நாடிப்போனா குறைவாகத் தான் கிடைக்கும் அதுவாகத் தேடி வந்தால் அதிகமாகக் கிடைக்கும்.









இரண்டுமே நல்லூர் தான்?.

## மனிதனின் பலம் நம்பிக்கைதான்!

மனிதனாகப் பிறப்பதற்கு அரிய மாதவம் செய்ய வேண்டும் என்ற பழமொழியை நமது முன்னோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோம். பூர்வ ஜன்மத்தில் புரிந்த நல்ல கர்மவினையால் நாம் அடுத்த பிறவியில் மனிதனாகப் பிறக்கிறோம் என்று புராணங்கள் சொல்கின்றன. இந்த மனிதப்பிறவியை அபூர்வமான பிறவியென்று சொல்லலாம்.

எத்தனையோ பிறவிகள் நாம் எடுத்திருப்போம், அதிலும் மனிதப்பிறவி நமக்கு கிடைத்தது ஒரு பொக்கிசமாகும். இந்தப் பிறவியில் அறிவாற்றல், மனோசக்தி, திறமை மூன்றும் இணைந்து மனிதனை செயற்படுத்துகிறது. இவைகளே மனிதனுக்குள்ளிருக்கும் சக்தி என்று சொல்லலாம்.

இந்தச் சக்தியானது மனிதனுக்கு அவனைப்பற்றி தெரிந்து கொள்ளச் செய்கிறது. அவனுக்குள் புதைந்து கிடக்கும் திறமையை வெளிக்கொண்டு வருகிறது. மனிதனுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. நன்னம்பிக்கையுள்ள மனிதன் சாதனையைப் படைக்கிறான், மாபெரும் வரலாற்றை உருவாக்குகிறான். மனிதனுடைய சக்தியே மனித குலத்தை வளர்க்கிறது. இந்த சக்தி அழகிய நம்பிக்கையான சமுதாயத்தைப் படைக்கிறது. நம்பிக்கையானது மனிதனை சாதிக்க முடியாதவற்றையும் சாதிக்கும்படி செயற்படுத்துகிறது.

மனிதன் மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்படுகிறான். மற்றவர்களின் மனதிலிருக்கும் அழுக்கை அகற்றி, உண்மையான சாரத்தை அறிய வைக்கிறான். ஞானி என்பவன் எல்லோரும் சந்தோசமாக வாழவேண்டும், சமூகம் வளர வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையை உணர்த்துகிறான். நாடு வளம் பெற வேண்டும், வளமான நாடு நல்லதொரு சமுதாயத்தைப் படைக்கிறது. நல்ல சமூகம் நற்குணத்துடைய மனிதனை உருவாக்குகிறது. நல்ல எண்ணமுடைய மனிதன் நம்பிக்கையோடு வாழ்கிறான். இந்த நம்பிக்கையே அவனுக்கு ஒளிமயமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் பெரிதும் உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசையா ஸ்ரீதரன்





# அருளை அள்ளி வழங்கும் அற்புததேவிக்கு இன்று கொடியேற்றம்

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான அம்பிகையானவள் தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப, துயரங்களை நீக்கும் பொருட்டு தெல்லிப்பழை என்னும் பதியிலே ஸ்ரீ துர்க்காதேவியாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பிகைக்கு இன்று கொடியேற்றம்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியான அம்பிகையானவள் இந்த அருள்மிகு தெல்லிப்பழையிலே வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் சிறப்பான ஆலயத்திலே அடியார்கருளும் நாயகியாக அருளை அள்ளி வழங்கும் அற்புதமான தேவியாக வீற்றிருக்கின்றாள்.

இன்று ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவமானது தேர், தீர்த்தம், பூங்காவனத்துடன் சிறப்பாக நிறைவுக்கு வரும்.

அருள் கொழிக்கும் இந்தச் சிறப்புமிக்க ஆலயம் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவரின் மேற்பார்வையில் பரிபாலிக்கப்பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே. இப்போது செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் தலைமையில் மிகவும் சிறப்பாகப் பரிபாலனர் செய்யப்பட்டு வருகிறது.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாக விளங்கும் அருள்மிகு அன்னை ஸ்ரீ துர்க்கா தேவியின் அளப்பருங் கருணையால் சீரோடும் சிறப்போடும் ஆறுகாலப் பூசையுடனே தன்னேரில்லாத ஆலயமாக மிளிர்கின்றது என்று கூறின் மிகையாகாது.

மெய்மறந்து உண்மையான பக்தியுடன் வழிபாடியற்றி நிற்கும் அடியார்களுக்கு அருளை வழங்கும் அம்பிகையின் அருள்பெற அன்பர்கள் அன்போடு அழைக்கப்படுகின்றார்கள்.

"நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பாம்
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாமே!"

---

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறீலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு ப.கௌரீசனின் திருமுறை அரங்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

++++

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறியில் இன்று மாலை 6 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் கோண்டாவில், மகா கணபதி பிள்ளையார் காளி கோயிற் பிரதம குரு சிவஸ்ரீ சோ.பாலகிருஷ்ணன் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர், இ.கர்ஜின் தலைமையில், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி அதிபர் திரு.ச.லலீசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.கமலநாதன், இந்து சாதனம் பத்திரிகை ஆசிரியர் சிவஸ்ரீ தியாக. மயூரகிரிக் குருக்கள், யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர் ச. நவநீதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சிவயோகர் அறநெறிப் பாடசாலை, கைலாசநாதர் வேத சிவாகம அறநெறிப் பாடசாலை மற்றும் வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கந்தபுராணம் நூலறிவுப் போட்டியிலும், கந்தபுராணம் சொற்பொழிவு நிகழ்விலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதிச் சிறப்புத் தேர்ச்சியை வெளிப்படுத்திய மாணவர்களுக்குமான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

+++++

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இலங்கை இளங்கலைஞர் மன்றத்தால் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டுவருகிறது. தெய்வீக இசையரங்கில் இன்று வயலினிசை, பக்தி இசை என்பன இடம் பெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்ற ஆசிரியரும் மாணவர்களும் இணைந்து நடத்தும் வயலினிசையில் கீபோட் து.பிரசன்னன், மிருதங்கம் ந.சதிஸ்குமார், கடம் ந.கேதாரநாத் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

பக்தி இசையில் பாட்டு ஜெயாசுகுமார், சாந்தன் கோகுலன், வயலின் அ.ஜெயராமன், ஹார்மோனியம் ந.செல்வச்சந்திரன், மிருதங்கம் சதா.வேல்மாறன், தபேலா வா.கபிலன், ப்பாட் அ.கேதீஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

---



# 26ஆம் திருவிழா
(பூங்காவனம்)

## நல்லூரில் நடமாடும் நாதனுக்கு திருமணம்

குன்றிருக்கும் இடமெலாம் நின்று ஆடுவான் தமிழ்
நின்றிருக்கும் இடமெலாம் வென்று பாடுவான்
வள்ளி தெய்வயானையோடு ஒன்றும் ஆகினான் எம்
உள்ளமெல்லாம் என்றுமென்றும் அழகன் ஆகினான்

நல்லூரில் நடமாடும் நாதனுக்கு திருமணம் இன்று
எல்லோரும் உனைவாழ்த்தி பாடுவார் மங்களம்
கல்தோன்றி மண்தோன்றா காலத்தை முந்தியவனே
கரம்பற்றி வாருமையா எங்களை காத்திடவே

வண்ணை கேந்திரன்

## நல்லூர் முருகனுக்கு இன்று திருக்கல்யாணம்

நல்லூரில் கந்தனுக்கு இன்று திருக்கல்யாணம்
பக்தர்கள் எல்லோரும் நேரிலே பார்க்க வேண்டும்
பொல்லாத காதல் மன்னன் கந்தன்
இல்லாமலா ஒரு திரு மணந்தானோ

திணைப்புனத்து வள்ளி மீது காதல் கொள்ளுமுன்பாக
வடிவழகி தெய்வானை அம்மையார் மீதே
தீராத காதல் கொண்டிருந்தான்
இன்று கொளுவல் பார்க்கத்தான் போகவேணுமய்யா...

புதுமணத் தம்பதிகள் கந்தன்– வள்ளி
புகவுளே விட்டிடாமல் தெய்வானை கதவடைப்பான்
இது நல்ல ரசனை பக்தர்கள் பார்த்து ரசிக்க
இன்று நல்லூர் எல்லோரும் போகத்தான் வேணுமய்யா...

தெய்வானையிடம் முருகன் மண்டியிட்டு
தேறவில்லை சம்மதம் என்றறிந்து
தேவருலக பெரியோர்கள் சமாதானம் கூறி தேற்றிட
பக்தர்கள் அனைவரும் இன்று
நல்லூர் போகத்தான் வேணுமய்யா...

கந்தையா கனகசபை, சண்டிலிப்பாய்.

## நல்லைக் குமரா!

ஊர்கள் திரண்டு உந்தன் வாசலில்
பாரெங்கும் உந்தன் நாமமே - கந்தா
அருட்கலாய் விளங்கும் வேந்தனே
ஆடியே பாடுகிறார் அடியார்கள் முருகா
வருவாய் வருவாய் வடிவேல் அழகா
தருவாய் தருவாய் அருளத் தருவாய்
காவடிகள் எடுத்தே கந்தா தொழுகின்றார்
பாவடிகள் சூட்டியே பக்தர்கள் மகிழ்கின்றார்கள்.

அராலியூர் இ.சரவணபவன்

## நல்லை முருகா...

நல்லை நகர சிங்கார வேலா
நம்மை ஆட்கொள்ளும் கார்த்திகேயா
நம்மை அளித்திடும் எங்கள் குமரா
நம்மவர் குறைகளை தீர்க்கும் அன்பா!

ஆறுமுகமென அழகுற அமைந்தவா
ஆறிரண்டு கரத்துடன் வரங்கள் அளித்தவா
ஆறுதல் தந்திடும் சிவனின் மைந்தா
ஆண்டாண்டுகள் ஆக காக்கும் கடம்பா

பக்தர்கள் மனதில் வீற்றிருக்கும் முருகையா
பசிதுன்பம் அகற்றும் அறிவழகா
பவனி வரும் உமை பாலகா
பகை அறுக்கும் மயில் வாகனா....

சிவரம்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மாறி மாறிப் பழிபோட்டே தமிழர்களைஏமாற்றாதீர்கள்

புதியஅரசமைப்புஉருவாக்கப்படாததற்குநாடாளுமன்றத்தைக் குறைகூறியிருக்கிறார்அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன. யாழ்ப்பாணத்தில் நேற்று ஆற்றிய உரையில் அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். கடந்த 4 வருடங்களாகப் புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டதுடன் பெருமளவு நிதியையும் செலவிட்டபோதும் ஆட்சியாளர்கள் எதனையும் செய்யவில்லை என்றும் அவர் சாடியிருக்கிறார். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்று வெளிப்படையாகவே பழியைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

அந்தக்குற்றச்சாட்டில்உண்மைஇல்லாமலும்இல்லை.அரசியல் களநிலவரத்தைப்புரிந்துகொண்டு வேகமாகநகர்ந்து, சாதகமான சூழ்நிலையிலேயே புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராக இருக்கவில்லை என்பது உண்மையே! மகிந்த அணியையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் காரணம் காட்டிக்கொண்டு காலத்தை இழுத்தடித்துதீர்வைமழுங்கடிப்பதில்ஐக்கிய தேசியக்கட்சியும் கணிசமானபங்கைக்கொண்டிருக்கிறது என்பது என்னவோஉண்மைதான்.

அதேநேரத்தில், அரசதலைவர்இப்படிப்பழியைஐக்கிய தேசியக் கட்சி மீது தூக்கிப் போட்டாலும் அந்தக் கட்சி என்னவோ புதிய அரசமைப்புவராமல்போனதற்கு, அரசதலைவரும்அவரதுகட்சியினருமேகாரணம்என்று குற்றஞ்சாட்டி வந்திருக்கிறது என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் தாம் வெளிப்படைத்தன்மையுடனும் உளச்சுத்தியுடனும் செயற்பட்டாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அரச தலைவருமே மகிந்த ராஜபக்சவைக் காரணம் காட்டி அதனைக் குழப்பியவர்கள் என்று அவர்கள் ஏற்கனவே குற்றச்சாட்டுப் பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டனர்.

அந்தக்குற்றச்சாட்டுக்களைஆதாரப்படுத்தும்வகையில்சுதந்திரக் கட்சியினரும் நடந்துகொண்டிருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.புதியஅரசமைப்பைஉருவாக்குவதற்காகநியமிக்கப்பட்ட வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் பல தடவைகள் புதிய அரசமைப்பு நகர்வுகளை இழுத்தடித்துத் தாமதப்படுத்தும் வகையில் நடந்துகொண்டனர்என்று அவ்வப்போது செய்திகள்வெளியாகிக் கொண்டேதான் இருந்தன.

தொடக்கத்தில் எல்லாவற்றுக்கும் இணக்கம் தெரிவித்து வந்த சுதந்திரக்கட்சிபிரதிநிதிகள், புதிய அரசமைப்புவரைபுஒப்பேறும் என்கிறநிலைவந்தபோது, அதிலிருந்துநழுவுவதிலும்அத்தகைய ஒருவரைபுக்குமுட்டுக்கட்டை போடுவதிலும்தீவிரமாகச்செயற்பட்டிருந்தார்கள் என்பதும் வெளிப்படை உண்மைகள்.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது பழியைப் போடும் அரச தலைவர் அப்போது தனது கட்சியினரை நெறிப்படுத்திப் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கும்படி கட்டளையிட்டிருந்தால் அந்த முயற்சிகள் இதைவிட முன்னேற்றகரமானதாக இருந்திருக்கும். ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் இந்த விடயத்தில் இணைந்து செயற்பட்டிருந்தால் மகிந்த அணியினரைக்கூடக் கட்டுப்படுத்திபுதியஅரசமைப்புமுயற்சிகளைமுன்னேற்றகரமாக நகர்த்தியிருக்க வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும்.

கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம் என்பதைப் போல, எல்லாமும்பாழாய்ப்போகும்நிலைவந்தபின்னர், அடுத்தவர்மீது குறை சொல்லி, பழியை அவர்கள் மீது தூக்கிப் போடுவதால் எந்தப் பயனும் இல்லை. இதையேதான் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீ லங்காசுதந்திரக்கட்சியும்காலம்காலமாகச்செய்து வந்தன. தீர்வு விடயத்தில்ஒருதரப்பு இணங்கிவந்தால்மறுதரப்பு அதைஎதிர்ப்பதையே தொடர்ந்து செய்துவந்தனர். இந்த இரு கட்சிகளும் சேர்ந்து ஆட்சியமைத்தபோது அத்தகையதொரு நிலை மாறும் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால், மீண்டும்மீண்டும்அதேபல்லவியைப்பாடிக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டுக்கொண்டு இருப்பது வெறும்அரசியல்ஏமாற்றுவேலையேதவிரவேறொன்றுமில்லை. உண்மையில்தீர்வையும் நாட்டின் முன்னேற்றத்தையும் விரும்புபவர்களாக இந்தத் தலைவர்கள் இருந்தால் இப்போதும்கூடக் காலம்தாழ்ந்துவிடவில்லை, ஒருதீர்வை நோக்கி வேகமாகமுன்னேறுவதற்கு.

அதைச்செய்வதற்கானதற்துணிபும்அரசியல்விருப்பும்தலைவர்களிடம்இருக்கிறதாஎன்பதேகேள்வி. தம்மைச்சிங்கள– பௌத்தர்களாகநிலைநாட்டிக்கொள்வதில்இந்தத்தலைவர்கள்காட்டும் ஆர்வமும் – வேகமும் அரசியல் தீர்வு ஒன்றைக்கொண்டு வருவதற்குத் தடையாக இருக்கின்றது என்பதே உண்மை. அதனை அவர்கள் உணராத வரைக்கும் பழியைத் தூக்கி அடுத்தவர் மீது போடும் இந்தக் கண்றாவி அரசியல் தொடரவே செய்யும்.



# காஷ்மீரும் தமிழர் எதிர்காலமும்

இந்தியாவின் அரசியல் மாற்றங்கள், மிகவும் முக்கியமான வரலாற்று மாற்றங்களாக, அதனைச் சூழவுள்ள நாடுகளில் அதிர்வலைகளை ஏற்படுத்திவிடுவது பொதுவான போக்காக உள்ளது. புவியியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும், சமூக, கலாசார, மொழி, மத ரீதியாகவும், அனைத்து நாடுகளும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பது இதற்கு முக்கிய காரணமாகும்.

தெற்காசிய நாடுகளில் இந்தியா பெரிய நாடாக இருப்பதால், இந்திய உள்நாட்டு விவகாரங்கள் தவிர, தெற்காசிய நாடுகளில் தாக்கத்தை விளைவிப்பது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடுகிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில், இலங்கைத்தீவின் தற்போதைய அரசியல் நிலமைகளை கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து, தமிழ் மக்களின் இருப்புக்குப் பேரிடர் ஏற்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

### தமிழ்த் தேசியம்

இன்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிலிருந்து மிதவாத தமிழ் அரசியல் வாதிகள் ஈறாக, போராட்ட அழிவுக்குக் காரணமான அனைத்துச் சக்திகளும் தமிழ் தேசியத்தை வாக்கு அரசியலில் வார்த்தைகளால் புகழ்ந்து உரைத்து வருகின்றன. போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது, சதிவலைகளுக்கு உடந்தைகளாக இருந்த பல சக்திகளும் போராட்ட தலைமைத்துவங்களை தமது வாக்கு அரசியலுக்காக, உபயோகிக்க தலைப்பட்டுவிட்டன. மாற்று தலைமை தாமே என கூறிக் கொண்டவர்களும் கூட, மிதவாத மேலைத்தேய செல்வாக்கின் தேவையால் தமக்குள்ளே முரண்பட்டுக் கொள்கின்றனர்.

தமிழ்மக்களது அரசியலைநிர்ணயிக்ககூடிய தமிழர் நலம் சார்ந்து ஆளுமை செலுத்தக் கூடிய, அரசியல் சார்பற்ற ஒரு தனித்துவமான நபரோ அல்லது கட்டமைப்போ இல்லாத நிலை உள்ளது.

இலங்கை அரசின் பொறிமுறைக்குள் சிக்கிக்கொண்டவர்களாகவே எல்லோரும் இருக்கின்றனர். அரசின் போக்கை திசை திருப்பக் கூடிய வகையிலான செயற்பாடுகள் எதுவும் இதுவரை இடம் பெறவில்லை. அல்லது சரியான சிந்தனைத் தெளிவை ஊட்டக் கூடிய எவரும் பெயர் பதிக்க முடியாத நிலை உள்ளது.

### தமிழ் தலைமை இல்லை

இதனால் தமிழ்த் தேசியத்தின் பால் சிந்திக்க முடியாத தன்மைக்கு, ஈழத்தமிழ் மக்கள் விட்டிருக்கிறார்கள். சிங்கள தேசியத்தை தீர்மானிக்கும் சக்தி பௌத்த பிக்குகளின் கட்டமைப்புகளுக்கு இருப்பதுபோல, சமூக நீதித் தெளிவும் தமிழ் தேசியத்தையும் தாங்கி நிற்கக் கூடிய, தமிழ்த் தலைமை இல்லாததும் பெரும் பிற்போக்கானது.

லடாக் பிரதேசம் தனித்துவமான பௌத்த மாநிலமாக மாற்றப்பட்டதையிட்டு, இந்திய நடுவண் அரசுக்கு நன்றி செலுத்தும் பௌத்த சமய தலைவர்கள், மிக விரைவில் இலங்கையில் நிலமையை சாதகமாக்கி கொள்ளும் வகையில், தமிழ்த் தேசியத்தை பிரிப்பதற்கு திட்டமிடப்போகிறார்கள். சிங்கள தேசத்தில் வாக்கு வெற்றிகளை குவிக்க வேண்டுமாயின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முக்கியமானது என்பது பொதுவான சிந்தனை திட்டமாக உள்ளது. அதேவேளை, பௌத்த - சிங்களம் தனது இருப்பை இலங்கைத் தீவு முழுவதும் நிலை நிறுத்துவதற்கு பெரும் முனைப்புடன் செயற்படுகிறது.

### தமிழ் மிதவாம் பயனற்றது

இதற்கான வியாக்கியாணங்களும் சிந்தனைகளும் காலாகாலம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறுதிரிபுபடுத்தப்படுகிறது. சிங்களவர்களின் இருப்பை கேள்விக்கு உள்ளாக்குவதல்ல. தமிழ் பேசும் மக்களின் நோக்கம், ஒருங்கிணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகமும் அதன் இருப்பை வலியுறுத்துவதும், சிங்கள தாயகத்தை பாதிக்காது என்பது கிராம மட்டங்களில் சென்றடையவில்லை.

தேவையை அறிந்து தமது சந்தர்ப்பவாத போக்கை மறைக்கும் முகமாக வெறும் வாய்ப்பேச்சுக்காக மட்டும் செயலாற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மிதவாதம் ஆழமான எந்த நகர்வும் செய்யாது. சிங்கள தேசத்துக்கு நொந்துவிடும், கடினமாக கிள்ளக் கூடாது என்பது போல நடந்து கொள்கிறது.


ஜம்மு - காஷ்மீர் பிராந்திய அரசியல் நிலை சந்தர்ப்பம் இலங்கைத் தீவில் வடக்கு - கிழக்கு என்று தொடர்ச்சியான தமிழ்பேசும் நிலப்பரப்பாக இருக்கும். தமிழ் பேசும் தாயகத்தை பிரித்து விடுவதற்கு, சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட புதிய மாவட்டம் ஒன்று உருவாக்கப்படக் கூடும். அவ்வாறான சிங்கள பெரும்பான்மை மாவட்டம் நிரந்தரமாக வடக்கையும் - கிழக்கையும் நிலத் தொடர்ச்சியை உடைத்து விடுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

**தாயகத்தை துண்டாடுதல்**

இந்த புதிய மாவட்ட உருவாக்கத்தில் வட மத்திய மாகாணத்தில் ஒரு பெரும் பகுதியும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியும் இணைக்கப்படும்பொழுது, சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட புதிய மாவட்டம் வங்க கடலின் கிழக்கு கரையை ஒட்டியதாகவும் அமையும். தமிழ் ஈழம் என்ற பெயரை உடைத்தெறிவதாகவும் அது அமையும். தமிழருக்கு இருந்த வங்க கடல் உரிமையும் இழக்கப்படும்.

இலங்கையைக் கையாளும் எந்த அரசும் தமிழ்த் தேசியத்தைப் பிரிப்பதன் மூலமே, தமது பௌத்த - சிங்கள இயந்திர அரசை காப்பாற்ற முடியும் என்பதை தார்மீக கொள்கையாக கொண்டிருக்கின்றன. ஆக தேர்தலுக்கு முன்பாக பதவியில் உள்ள அரசு செய்யாவிட்டாலும், அடுத்து வரக்கூடிய சாத்தியப்பாடுள்ள, மாக்கியவல்லி சித்தாந்தத்தை முழுமையாக செயல்வடிவில் நடத்த இருக்கும் கோத்தபாய அரசு, சட்டம் ஒழுங்கு என்பது, பயத்தின்பால் பட்டது என்ற சிந்தனையை கொண்டதாகவே இருக்கமுடியும். மிகஅதிகமான பயமுறுத்தும் அடக்குமுறைமூலம், ஆட்சி செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கக்கூடிய கோத்தபாய அரசு, அதீத ஆயுத பிரசன்னத்தின் மத்தியில் காஷ்மீர் பிரிவினையை மையமாக வைத்து நிச்சயமாக நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

பஞ்சாப்பில் காலிஸ்தான் கேட்டவர்கள், இன்று கனடாவில் ஒரு சிறு குழுவாக உள்ளனர், அதேபோல் காஷ்மீர் கேட்டவர்களும் எங்கோ ஒரு அரபு நாட்டில் குடிபுகுந்து விடுவார்கள் என்பதே இந்தியாவின் கனவு ஆகும். இலங்கையின் எதிர்பார்ப்பும் இதுவாகவே இருக்கிறது. எங்கோ மேலை நாடுகளில் வாழ்பவர்கள் மே மாதத்தில் ஒருமுறையும் நவம்பரில் ஒரு முறையும் சலசலத்துவிட்டு சென்று விடுவார்கள் என்பதுவே.



**தாக்கங்கள்**

தெற்காசியாவின் சமூக, புவியியல், அரசியல் பொருளாதாரத்தில் இந்தியா மிகவும் பெரிய நாடு. இந்தியாவில் இடம்பெறும் மாற்றங்கள் யாவும் அதன் உபபிராந்திய நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதில் அரசியல் சட்ட தீர்மானங்களின் மாற்றம் கொண்டு வருதல் பெரும்பான்மை ஜனநாயக ஆளும் உரிமையைப் பயன்படுத்தி, தேசிய இனங்களை சிதைத்தல், பாரம்பரிய நிலத்தைக் கைப்பற்றுதல் போன்ற விடயங்களில் ஏனைய அனைத்து தெற்காசிய நாடுகளைவிட இலங்கையில் உள்ள சமூக அரசியல் நிலை இதனை விரைவாக பிரதி செய்து விடக் கூடிய சூழலைக் கொண்டுள்ளது.

இலங்கையின் பெரும்பான்மை ஜனநாயகம் ஒரு தேர்தலால்தான் உருவாக வேண்டும் என்பதல்ல, மேற்குறிப்பிட்ட விடயங்களுக்காக எந்தச் சமயத்திலும் ஏகமனதான தீர்மானம் இயற்றப்படலாம்.

ஆனால், அரசியல் சூழல் சாதகமாக எழும் பொழுது, இவை இலகுவாக நிறைவேற்றப்படுவது கடந்த கால அரசியல் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டவைகளாகும்.

பன்னாட்டு அரங்கில் இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் காஷ்மீர் அரசியல் அதிர்வலைகளால் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இலங்கை அரசு என்பது ஒரு பெரிய இயந்திரம். அதற்குள் எழும் சிறு பொறிமுறை சிக்கல்களை, உரிமை கோரி கையாளுபவர்களே அரசியல்வாதிகள்.

இதிலே தமிழ் அரசியல்வாதிகள் அந்தப் பொறிமுறை சிக்கல்களில் ஒன்றாக இருக்கின்றனரே அல்லாமல், கையாள்பவர்களாக இன்னமும் மாறவில்லை என்பதுதான் இங்கே வருத்தம் தருகிறது.

நன்றி: புதினப்பலகை

லடாக் பிரதேசம் தனித்துவமான பௌத்த மாநிலமாக மாற்றப்பட்டதை இட்டு இந்திய நடுவண் அரசுக்கு நன்றி செலுத்தும் பௌத்த சமய தலைவர்கள், மிக விரைவில் இலங்கையில் நிலமையை சாதகமாக்கி கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியத்தை பிரிப்பதற்கு திட்டமிடப் போகிறார்கள். சிங்கள தேசத்தில் வாக்கு வெற்றிகளை குவிக்க வேண்டுமாயின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முக்கியமானது என்பது பொதுவான சிந்தனை திட்டமாக உள்ளது. அதேவேளை, பௌத்த-சிங்களம் தனது இருப்பை இலங்கைத் தீவு முழுவதும் நிலை நிறுத்துவதற்கு பெரும் முனைப்புடன் செயற்படுகிறது.



## ஆசிரியருக்கான கடிதம்

# தண்ணீரே கண்ணீரைப் பன்னீராக்கும்

உலகத்துக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்துக்களில் மிகப்பெரிய சொத்து நாம் குடிக்கும் தண்ணீராகும். இதனை ஒரு பெறுமதியாக எவரும் கருதுவதில்லை. கிள்ளியெடுத்துச் செலவழிக்க வேண்டிய தண்ணீரை அள்ளி அள்ளி எடுத்துக் கொட்டிச் செலவழிக்கின்றோம். ஆறுகளிலிருந்து அநியாயமாகத் தண்ணீர் கடலோடு கலக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் பாவனைக்குழாய்களிலிருந்து நாள்தோறும் தண்ணீர் பயனற்றுப் போகிறது. ஆலயங்கள், பாடசாலைகள், மண்டபங்கள், மடங்கள் என ஒவ்வொரு நிகழ்ச்சிகள் பிரபல்யம் அடையும்போது தண்ணீர் கண்கடை தெரியாமல் பயனற்றுப் போவது ஏராளம் ஏராளம். சின்னப் பாத்திரத்தால் அள்ளிக் குளிக்கும்போது உள்ள சிக்கனம் பெரிய பாத்திரத்தாலோ அல்லது வாளியாலோ குளிக்கும்போது வீணாகிறது. இனிவருங்காலம் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும். கிராமங்களில் தண்ணீரின் சிக்கனம் பேணப்படுகிறது. நகரங்களில் அதன் பெறுமதி உணரப்படுவதில்லை.

எவ்வளவுக்கெவ்வளவு தண்ணீரைச் செலவழிக்கும் நாம், போதியளவு தண்ணீரைக் குடிப்பதில்லை என்பது ஆய்வுகளில் இருந்து தெரிய வருகிறது. இலங்கையில் 50 லட்சம் பேர் போதிய அளவு தண்ணீர் குடிப்பதில்லை என்ற அறிக்கை மிகவும் கவலையளிக்கிறது. இதில் 67சதவீதம் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சிறுநீரகங்களில் ஏற்படும் நோய்களைச் சுமப்பவர்கள் விடுகின்ற கண்ணீரைத் தீர்த்தமாக்கு வதற்கும் அதைப் பன்னீராக்குவதற்கும் ஒரேயொரு தீர்வுதான் முன்வைக்கப்படுகிறது. அது யாதெனில் நன்றாகச் சுத்தமான தண்ணீரைத் தினமும் பருகுங்கள்.

கே. எஸ். சிவஞானராஜா.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை, முதலைக்குத்தி, வட்டுப்பித்தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைகாடு, சிறு நாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, மன்னார் மருத்துவமனை, பூட்சிற்றி, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்டச் செயலர் அலுவலகம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் மருத்துவமனை, தள்ளாடி இராணுவமுகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# அரசே! எம் உறவுகளை ஒப்படைத்துவிடு பன்னாடுகளே ஊமையாகிவிட்டீர்களா?

## கல்முனையில் உறவுகள் போராட்டம்

கல்முனை, ஓக. 31

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பல்வேறு அமைப்புக்களும் இணைந்த நேற்றைய போராட்டம் பெருமெடுப்பில் நடைபெற்றது. எங்கள் உறவுகளை அரசு ஒப்படைக்கவேண்டும், பன்னாடுகளே எங்கள் விடயத்தில் ஏன் மௌனமாய் இருக்கின்றீர்கள் என்று கேட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை தரவைப்பிள்ளையார் ஆலயத்தில், பூசைகளுடன் ஆரம்பமான வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பேரணி கல்முனை முதன்மை வீதியூடாகச் சென்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை சென்றது. அங்கு மனுக் கையளிக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலர் ரீ.ஜெ.அதிசயராஜ், மனித உரிமை ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன் ஆகியோரிடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மனுவைக் கையளித்தனர்.

போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

"10 வருடங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இதுவரை 35 பேருக்கு மேல் எம்மோடு இணைந்து வெயில், பனி, மழை பாராது தமது உறவுகள் இன்று வருவர், நாளை வருவார் என்ற எதிர்பார்போடு உயிரைவிட்டுள்ளார்கள். அரசிடம் மனுக்கள் கையளித்தோம். பல போராட்டங்களை முன்னெடுத்தோம். எதையும் அரசு செவிசாய்ப்பதாக இல்லை. அரசு மூலமாக எமக்கு நீதி கிடைக்கவில்லை. நாம் வீதிகளில் நின்று கத்துவது பன்னாடுகளுக்குக் கேட்கவில்லையா? அரசியல் தலைவர்களின் மாற்றங்களால் நாங்கள்கூடக் காணாமல் போவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆட்சி மாறுவதற்கு முன்னர் பன்னாடுகள் கவனம் செலுத்தி எங்களுடைய உறவுகளை மீட்டுத்தர முயற்சி செய்ய வேண்டும். பன்னாட்டு விசாரணை வேண்டும்." என்று வலியுறுத்தினர்.

"வெள்ளை வானில் கொண்டு சென்றவர்கள் எங்கே? பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும். பன்னாடுகளே ஏன் ஊமையாய் இருக்கின்றீர்கள்? கடத்தப்பட்ட எமது உறவுகள் எங்கே? கையில் கொடுத்த எங்கள் பிள்ளைகள் எங்கே? எம் உறவுகளைக் கொலை செய்தவர்கள், கடத்தியவர்களுக்குப் பதவி வழங்குவதுதான் நல்லாட்சியா?" போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (து)

## துப்புரவுப் பணி

கொடிகாமம், ஓக. 31

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க பாடசாலை வளாகத்தில் துப்புரவுப் பணி கடந்த புதன்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது.

நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்றிட்டத்தின் கீழ் கிராம மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ஐ-159)

✦✦✦

கொடிகாமம், ஓக. 31

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் நாவற்குழி கிழக்கு ஜே/295 பிரிவில் சுரட்டிகுளம் துப்புரவு செய்யப்பட்டது.

கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்போக அலுவலகர் கோகுலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் அரச தலைவர் செயலக உதவி நிர்வாக அதிகாரி அசங்க தேசப்பிரிய, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான தி.தங்கவேலு, கமநல சேவை நிலைய அபிவிருத்தி அலுவலர் ரி.அருள்நேசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஆட்சி மாற்றத்துக்கு முன்னரே உறவுகளைத் தேடித் தாருங்கள்

## நாமும் காணாமலாக்கப்படுவோம் என்ற பயம் ஏற்பட்டுள்ளதென்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஜெனிவாவுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 31

தற்போதைய அரசியல் சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. மாற்றம் ஏற்பட்டால் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களால், போராட்டத்தில் உள்ள நாங்களும் காணாமல் ஆக்கப்படலாம். எனவே ஆட்சி மாற்றங்கள் ஏற்பட முன் எமது உறவுகளைத் தேடித்தர பன்னாட்டுச் சமூகமும் ஐ.நாவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தின் பின்னர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பன்னாட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தினத்தையொட்டி வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஓமந்தை மற்றும் கல்முனை ஆகிய இடங்களில் நேற்று நடைபெற்றன. அதன்பின்னர், சுவிஸ் நாட்டின் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு என்று அந்த அறிக்கை அனுப்பப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது போராட்டம் ஆரம்பித்த பின்னர், பன்னாட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினம் பல கடந்துசென்றுவிட்டன. எனினும் எமது உறவுகளை மீட்கவும் நீதியை பெற்றுக்கொடுக்கவும் நேரடியாக தலையிடுமாறு பன்னாடுகளையும் ஐ.நாவையும் கோரிநிற்கின்றோம்.

எமது உறவுகளின் நிலையை அறிவிக்கக் கோரி நாம் 922 நாள்களாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். இலங்கை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தாலும் அதன் ஒட்டுக்குழுக்களாலும் பல்வேறு விதங்களில் (வெள்ளை வான் கடத்தல்கள், கடத்தல், கைது) எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தற்போதைய அரசியல் சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. அந்த நிலை ஏற்பட்டால், எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களால் போராட்டத்தில் உள்ள நாங்களும் காணாமல் ஆக்கப்படலாம். எனவே ஆட்சி மாற்றங்கள் ஏற்பட முன் எமது உறவுகளைத் தேடித்தர பன்னாட்டுச் சமூகமும் ஐ.நாவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிக்கான பொறிமுறையை உருவாக்காத சிங்கள அரசு இழப்பீட்டுக்கான அலுவலகத்தை உருவாக்க வேண்டிய தேவை என்ன? எமது உறவுகளுக்கான நீதியே எமக்கு வேண்டும், நிதி அல்ல என்பதை இலங்கை அரசுக்கும் பன்னாடுகளுக்கும் தெளிவாகக் கூறிவைக்கவிரும்புகின்றோம். எமக்கு உண்மையான நீதி கிடைக்கவேண்டுமானால் பன்னாட்டுத் தலையீட்டுடன் கூடிய பொறிமுறை ஒன்றின் மூலம் மட்டுமே கிடைக்கும். 'காலம் கடத்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமன்' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)



## நாற்காலிகள் கையளிப்பு

கொடிகாமம், ஓக. 31

யாழ்ப்பாணம் கெற்பேலி கிராம அலுவலர் அலுவலகத்துக்கு கெற்பேலி விவசாய சம்மேளனத்தால் நாற்காலிகள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

விவசாய சம்மேளனத் தலைவர் செ.ஆனந்த குமார், செயலர் ச.சாந்த குமார் ஆகியோரால் கிராம அலுவலர் க.தனேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-159)

## காப்புறுதிப் பத்திரமின்றி சென்றவருக்கு 25,000 ரூபா தண்டம்

காப்புறுதிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இருவரும் பயணித்தபோது பொலிஸார் அவர்களைமறித்து வாகன ஆவணங்களைக் கோரினர். ஒருவர் காப்புறுதிப் பத்திரமின்றிப் பயணித்தார் மற்றையவர் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில் வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து மேற்குறித்த தண்டம் விதிக்கப்பட்டது. (து-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை நெருடிவிடும் வகையில் உறவுகளைக் கோரிப் போராட்டம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஓமந்தையில் பெருமளவில் திரண்டனர்






வவுனியா, ஓக. 31

பன்னாட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று வவுனியா ஓமந்தையில் பெருமெடுப்பிலான போராட்டம் நடத்தப்பட்டது. பார்ப்பவர்கள் மனம் உருகுமளவுக்கு ஓலமிட்டும், சிலர் இரந்து அழுதும், தமது உறவுகளைக் கோரி அழுதனர். இதனால் அந்தப் பகுதி சோகமயமாகக் காணப்பட்டது.

வவுனியா -பன்றிகெய்தகுளம் விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அங்கிருந்து ஏ-9 வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று, இரண்டு கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி அமைந்திருந்த பகுதிவரை பேரணியாகச்சென்று போராட்டத்தை நடத்தினர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள் அரசுக்கெதிரான, கோசங்களை எழுப்பியவாறு பேரணியில் ஈடுபட்டனர்.

ஓமந்தைச் சோதனை சாவடி அமைந்திருந்த பகுதிக்குப் பேரணி சென்றுகொண்டிருந்த போது ஓமந்தையில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

போர் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமது பிள்ளைகளை இராணுவத்திடம் கையளித்த பகுதியே ஓமந்தை. அதனால் ஓமந்தையில் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னரே தெரிவித்திருந்தனர்.

அவர்கள் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை நினைத்துக் கதறி அழுதனர், உணர்ச்சி வசப்பட்ட சில தாய்மார்கள் பின்னர் மயங்கிச் சரிந்தனர்.

இதனால் சற்றுநேரம் அந்தப் பகுதி சோகமயமானதாகக் காட்சியளித்தது. அங்கு நிற்பவர்களுக்கும் அழுகை வருமளவுக்கு உறவுகள் கதறியழுதனர். தமது உறவுகளைத் தங்களிடமே ஒப்படைத்துவிடுங்கள் என்று இரந்து அழுதனர். அவர்கள் அழுது குளறும் காட்சி எல்லோர் மனங்களையும் கட்டிப்போட்டிருந்தது. அவர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

ஒவ்வொரு வருடமும் பன்னாட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை நாங்கள் ஏமாற்றத்துடன் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். தமது உறவுகளைத் தேடிவந்தவர்களில் இதுவரை 52 பெற்றோர்கள் உயிரிழந்துள்ளனர். இறுதிவரை அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்த நிலமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் எமது பிள்ளைகளைத் தேடுவதற்கு யாருமே இருக்கமாட்டார்கள் என்று தெரிவித்தனர்.

### பயனற்ற ஓ.எம்.பி.

காணாமலாக்கப்பட்டவர்களின் விடயங்களைக் கவனிக்கும் அலுவலகம்(ஓ.எம்.பி.) பாதிக்கபட்ட மக்களின் தேவையைக் கருத்திற்கொள்ளாமல் உருவாக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நீதிக்காக போராடும் எம்மைப் புறந்தள்ளிவிட்டு எமக்கு இழப்பீடு வழங்குவதற்காகவே அது உருவாக்கப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டுடன் கூடிய பொறிமுறை மூலமே நாம் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றனர்.

### போராட்டம் தொடரும்

பன்னாட்டுச் சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து உண்மையைக் கண்டறிவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றவேண்டும்.

நாம் உயிருடன் இருக்கும் வரை எமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

### பன்னாடுகளில் போராட்டம் தொடருங்கள்

எமது போராட்டங்களுக்கு பன்னாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தத்தமது நாடுகளில் தொடர் போராட்டங்களை நடத்தவேண்டும்.

எங்கள் போராட்டத்துக்கு பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளையோர் அனைவரும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

### புத்தகம் வெளியீடு

பிள்ளைகளை தேடி உயிரிழந்த பெற்றோர்களின் நினைவாக அவர்களுடைய பிள்ளைகளின் வரலாறுகள் அடங்கிய புத்தகம் ஒன்றும் வெளியீடு செய்யப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அனுப்புவதற்கான மனுவும் அருட்தந்தை ஒருவரிடம் வழங்கப்பட்டது.

### அரசியல் வாதிகளும் கலந்துகொண்டனர்

போராட்டத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவும் கலந்துகொண்டிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிறீதரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, சிவாஜிலிங்கம் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புகள், இளையோர் பலரும் கலந்துகொண்டனர். (து-110,ரி4)



## விவசாய கிணறுகள் சீரமைப்பு

கொடிகாமம்,ஓக.31

கைதடி, கமநல சேவைகள் நிலைய பிரிவில் உள்ள விவசாயக் கிணறுகள் 10 சீரமைக்கப்பட்டு அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கைதடி பெரும்போக அலுவலர் கோகுலன் தலைமையில் நடைபெற்றது.

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டத்தின் கீழ் காரை தோட்ட வெளிப் பகுதியில் உள்ள விவசாயக் கிணறுகளே வேள்ட் விசன் நிறுவனத்தால் துப்புரவு செய்யப்பட்டன.

நிகழ்வில் அரச தலைவர் செயலகத்தின் மூத்த உதவி முகாமையாளர், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு ,சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பி னர்கள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-159)



## வீட்டின் மீது சரிந்தது பனை மரம்

கொடிகாமம், ஓக.31

கடும் காற்றுடன் மழை பெய்து கொண்டிருந்த தருணத்தில் வீடொன்றின் மீது பனைமரம் சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் மந்துவில் கிழக்கில் நேற்று முந்தி னம் வியாழக்கிழமை இரவுஇடம் பெற்றுள்ளது.

இதன்போது வீட்டின் சுவாமி அறையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. வீட்டில் இருந்தவர்களுக்கு எந்தவித பாதிப்புக்களும்ஏற்படவில்லை.

அருகிலிருந்த உறவினரின் காணியிலிருந்த பனைமரமே சரிந்து வீழ்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜீவராசா என்பவரது வீடே சேதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-159)

## ஆவணி சதுர்த்தி

யாழ்ப்பாணம், ஓக.31

ஆவணி சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு சிறப்பு பூசை, அபிசேகம் இடம் பெற்று ஆவணி சதுர்த்தி உற்சவம் நடைபெறும். (ஐ-17)

## கண்டல் தாவரங்கள் நடுகை

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்ப்பாணம் நாவாந்துறை வசந்தபுரம் கடற்கரையோரத்தில் கண்டல் தாவரங்கள் நடும் சிறப்பு வேலைத்திட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட் டது.

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச்செயலர்,யாழ்ப்பாண பிரதேச செயலக அதிகாரிகள்,யாழ்ப்பாண மாநகர முதல்வர், கிராம அலுவலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர் (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறுகால நீதி எங்கே? செயலகம் முன் போராட்டம்

மன்னார், ஓக. 31

பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாகப் போராட்டம் நடைபெற்றது. அது பின்னர் மன்னார் நகர சபை வரை பேரணியாகச் சென்று நிறைவடைந்தது.



2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? என்பதற்கு இந்த அரசு 10 வருடங்களாக உரிய தீர்வு வழங்கவில்லை.

கூட்டரசு நிறைவடைவதற்குள் பன்னாடுகளின் தலையீட்டுடன் நல்ல தீர்வு வழங்கக் கோரியும், பல வருடங்களாக அரசியல் கைதிகளாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களையும் விடுவிக்கக் கோரி காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மன்னார் குடிமக்கள் குழுவின் ஏற்பாட்டில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் மத குருக்கள், சமூக ஆர்வலர்கள், மன்னார் நகரசபை தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

போரட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் "நிலைமாறுகால நீதி எங்கே? இலங்கை அரசே உண்மையை மறைக்காதே, ஒரு நாள் நிச்சயம் உண்மை வெளிவரும், இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அக்கறையில்லையா, உறவுகள் காணாமல் போனவர்கள் அல்ல, இவர்கள் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள்" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் ஒளிப்படங்களையும் தாங்கியவாறு



கோசங்களையும் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (து-56.213)

## காணாமல் ஆக்கப்படுவதில் இலங்கைக்கு நீண்ட வரலாறு

*இந்தத் தினத்தையொட்டிய அறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கிறது*

யாழ்ப்பாணம், ஓக. 31

வலிந்து காணாமலாக்கப்படும் சம்பவங்களைப் பொறுத்தவரை இலங்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பன்னாட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. அதனையொட்டி ஐக்கிய நாடுகள் சபை நேற்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமற்போனோர் அலுவலகம் மாபெரும் பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்கிறது. அந்த அலுவலகத்தின் சவால்மிக்க ஆணையை நிறைவேற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு அவசியம்.

நீண்டகால நோக்கிலான நிலைபேறான முயற்சிகளின் ஊடாகவே துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு தீர்வையும், மீட்சியையும் அளிக்க முடியும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. (து)

## இன்றைய கலந்துரையாடலுக்காக சகல எம்.பிக்களுக்கும் அழைப்பு

மன்னார், ஓக. 31

வடக்கிலுள்ள பொதுமக்களின் காணி பற்றிய தகவல்கள் மற்றும் அவற்றின் விடுவிப்புத் தொடர்பான கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாணத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிட் குரூஸ் தெரிவித்தார்.

படையினர் மற்றும் தொல்பொருள் வனஜீவராசிகள் திணைக்களங்கள் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானதுமான கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறைப்படி அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் காணி உதவி ஆணையாளர் மற்றும் மீள் குடியேற்ற அதிகாரிகளுடன் மக்கள் இணைந்து கடந்த ஜூலை 29ஆம் திகதி நடந்த கலந்துரையாடலில், தமது பிரச்சினைகளை நாடாளுமன்றில் பேசுவதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார். (து-213)



## மறவன்குளத்தில் சமுர்த்தி கட்டடத்துக்கு அடிக்கல்

வவுனியா, ஓக. 31

வவுனியா, மறவன்குளத்தில் புதிய சமுர்த்திக் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகர் ரமேஷ் மற்றும் சமுர்த்தி சங்கத்தினர், கிராமமட்ட அமைப்பினர் ஒருங்கிணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

நிகழ்வில் அமைச்சர் ரிசாத்தின் இணைப்புச் செயலர் முத்து முகமட், நகரசபை உறுப்பினர்கள் அப்துல் பாரி, எ.ஆர்.எம்.லரீப், அபிவிருத்தி உத்தியோகத்தர் சதீஸ், கிராம அலுவலர், பொலிஸ்பொறுப்பதிகாரி, கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கைத்தொழில், வாணிக அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த கட்டடம் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

## காணாமலாக்கப்பட்ட உறவுகளை ஒருகணமாவது பார்க்கவேண்டும்

*மன்னார் போராட்டத்தில் வலியுறுத்து*

மன்னார், ஓக. 31

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு முடிவு வேண்டும். அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்றாவது சொல்லுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். அவர்களை ஒரு கணமாவது நாங்கள் பார்க்க வேண்டும். அவர்கள் இருக்கின்றார்களா? என்பதுதான் எங்கள் கேள்வி. எங்களுக்கு எத்தனை வசதிகளை அவர்கள் செய்து தந்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்தார்.

பன்னாட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டிய போராட்டம் மன்னாரிலும் நடந்தது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நேற்று அல்ல, பல வருடங்களாகவே நாங்கள் எங்கள் உறவுகளைத் தேடுகின்றோம்.

ஒரு சில நிகழ்வுகளை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளில் எமது முன்னை நாள் ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகையின் நல்லமுயற்சிகளையும் அந்த நேரத்தில் பல மக்கள் எங்கள் கண் முன்னால், நாங்கள் தான் எமது உறவுகளைக் கொடுத்தோம் என்று அழுதவாறு கூறியிருந்தனர்.

எமது மாவட்டத்தில் இவர்களை யார் கொண்டு சென்றார்கள், இவர்களுக்கு யார் பொறுப்பு, என எல்லோருக்கும் தெரியும்.

இன்று வரை நாம் தேடுகின்றோம். அது மட்டுமல்ல பலர் பல இடங்களுக்குச் சென்று அங்கு இருக்கின்றார்கள், இங்கு இருக்கின்றார்கள் என்று கூறி எமது மக்களை பல்வேறு கோணங்களில் திசை திருப்பிச் சென்றுள்ளனர்.

ஆனால்எதற்கும்பதில்வரவில்லை. ஆயர் இராயப்பு ஜோசப்பு இந்தப் பிரச்சினையைப் பன்னாட்டுமட்டத்துக்குக் கொண்டு சென்றார். எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் விடாப் பிடியாக இருந்தார். இந்த 10 வருடங்களில் அவர்கள் பல்வேறு ஆணைக்குழுக்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் எந்த ஆணைக்குழுவும் எங்களுக்கு முழுமையான பதில் வழங்கவில்லை. ஐ.நா. வரை தமிழர்களுடைய மனசாட்சிதட்டியுள்ளது. ஆனால் இன்னும் அது கேட்கப்படவில்லை. வருகின்ற செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு உள்ளது. அங்கே நம் தமிழர்களின் குரல் கேட்கும்.

அரசுடன் நிறையக் கதைப்பதாக அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதாகக் கேள்விகள் கேட்பதாகத் தெரிவிக்கப்படும்.

ஆனால் அதற்கு உருப்படியான பதில்களைத் தருவார்களா? என்பது உலக மனசாட்சியை நாம் தட்டிக் கொண்டே இருப்பதில் தான் உள்ளது.

எனவே எமது பிள்ளைகள் எமது உறவினர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்ற தீர்வைக் கூறும்வரை கேட்டுக் கொண்டே இருப்போம் - என்றார். (து-56)

## பதுளையிலிருந்து வவுனியாவுக்கு உறவுப் பாலம் நிகழ்வு ஆரம்பம்

வவுனியா, ஓக. 31

வடக்கு மக்களுடனான உறவுப்பாலம் நிகழ்வுகளுக்கு பதுளை, பண்டாரவளைப் பகுதிகளிலிருந்து சுமார் 50க்கும் மேற்பட்ட இளையோர் வவுனியாவுக்கு வந்து நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இது நடைபெறுகின்றது.

கடந்த 28ஆம் திகதி தொடக்கம் வவுனியாவில் தங்கியிருந்து தமிழர்களின் வாழ்வியல் தொடர்பாகவும் தமிழர்களின் பாரம்பரியங்கள் உணவு, உடை, கலாசாரம் போன்றவற்றைப் பார்வையிட்டு, பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றனர். நேற்றுக் காலை கோவில்குளம் பகுதியிலுள்ள உமாமகேஸ்வரனின் நினைவிடத்துக்குச் சென்றனர். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவில் முரண்பாடு இல்லை

*- ராஜகருணா*

கொழும்பு, ஓக.31

அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் எந்த முரண்பாடும் கிடையாது. வேறுபட்ட நிலைபாடுகளே இருக்கின்றன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரில் யாரை வேட்பாளராகத் தெரிவு செய்தாலும் தெரிவு செய்யப்படுபவரை வெற்றி பெறச் செய்வோம் - என்றார். (ஏ)



# வறட்சி காரணமாக மன்னாரில் 24,000 கால்நடைகள் பாதிப்பு

*தவிசாளர் பரஞ்சோதி தெரிவிப்பு*

*மன்னார், ஓக.31*

*வறட்சி காரணமாக நானாட்டான் பிரதேசத்தில் இருபத்து நான்காயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்*

அண்மைக் காலமாக மன்னாரில் ஏற்பட்டு வரும் வறட்சி தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கான குடிதண்ணீர் மற்றும் மேய்ச்சல் இல்லாமல் நானாட்டான் பிரதேசத்தில் மாத்திரம் இருபத்தி நான்காயிரத்துக்கும் அதிகமான கால் நடைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

கொழுந்து விட்டெரியும் வெப்பம் காரணமான குளங்களில் தண்ணீர் வற்றியுள்ளது. மேட்டு நிலங்களில் புற்கள், செடிகளை இல்லாத நிலையில் கால்நடைகள் பனை ஓலைகளையும் வேப்பம் இலைகளையும் சாப்பிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது

இதனால் கால்நடைகள் மெலிந்து இறக்கும் தருவாயில் உள்ளன.

நாடு முழுவதும் இந்த வறட்சி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால் உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. " எனத் தெரிவித்தார். (ஐ-213)

# கூட்டுறவு மக்கள் கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.31

''நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு மக்கள் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வடக்குமாகாணகூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் அளவெட்டி மல்லாகம் மற்றும் பருத்தித்துறை ஆகிய இரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்இந்த கூட்டுறவு மக்கள் விற்பனை நிலையங்களை திறந்து வைத்துள்ளன.

அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு மக்கள் கடை மல்லாகம் சந்தியில் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடை கடந்த புதன்கிழமை மந்திகை சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த கூட்டுறவு மக்கள் கடைகள் நுகர்வோரை கவரும் வகையில் நவீன முறையில் அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. (ஐ-17)

# கற்றல் நடவடிக்கை நடைபெறமாட்டாது

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில்க.பொ.த.உயர்தரவிடைத்தாள்திருத்தும் பணிகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும்14ஆம்திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் உயர்தரவகுப்புக்கள்மற்றும்13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி மாணவர்களுக்கானகற்றல் நடவடிக்கைகள் நடைபெறாது என்று பாடசாலை அதிபர் எஸ். கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

# தாக்குதலில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஓக.31

தாக்குதலுக்கு இலக்கான சகோதரர்கள் இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பாலாவிப் பகுதியில்கடந்தபுதன்கிழமை இரவு இடம்பெற்றது.

பாலாவி வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு நசன் (வயது- 24 ), மார்க்கண்டு ஜெகதீஸ்வரன் (வயது -17) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

சகோதரர்கள் இருவரும் வேலை முடிந்து வீடு திரும்பிய வேளையில் பாலாவிப் பகுதியில் வளர்ப்பு நாய்கள் துரத்தியுள்ளன.

இது தொடர்பாக நாயின் உரிமையாளருக்கு தெரிவித்த போது, அவர் ஆள்களைத் திரட்டித் தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள்

சாவகச்சேரி, ஓக.31

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலகின் சாவகச்சேரி பிரிவால் சமுர்த்திப் பயனாளிகளுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நேற்றுமுன்தினம் நான்கு இடங்களில் நடத்தப்பட்டன.

பயனாளிகளுக்கு உளவளத்துறை, போதை ஒழிப்பு மற்றும் சமுர்த்தி அமைப்புக்களைப் பலப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

சரசாலை வடக்கு, மட்டுவில் சந்திரபுரம், கல்வயல், சாவகச்சேரி நகரம் ஆகிய பிரிவுகளில் உள்ள பொது மண்டபங்களில் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டன.

அரசதலைவர் செயலக ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டத்தின் கீழ் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டன என்று பிரதச சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் இ.அன்ரனி தெரிவித்தார். (ஐ-9)



# விழிப்புணர்வுக் கருத்தமர்வு

கொடிகாமம், ஓக.31

மீசாலைகிழக்குகிராமஅலுவலர் பிரிவில் சிறுவர் பாலியல் முறைகேடுமற்றும்போதைப் பொருள்தொடர்பானவிழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

''நாட்டுக்காக ஒன்றிணைவோம்" நிகழ்ச்சி திட்டத்துக்கமைய பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி சி.பத்மாஜினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி. அபராஜிதன், கிராம அலுவலர் நா.கௌரிதரன், சமுர்த்திஅலுவலர் த.கிருபாகரன், குடும்பநல அலுவலர் திருமதி சுதந்திர. கலிஸ்ரா, பொதுஅமைப்புக்களின்பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்

நிகழ்வின் இறுதியில் "போதைப்பொருளில்இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு நாமே கற்றுக் கொள்வோம்", "அறிவிற்சிறந்தபிள்ளையே மாண்புடையவர்". "சிறுநீரக நோயைத் தவிர்த்துக் கொள்வோம்" தொடர்பான துண்டறிக்கைகளும் வழங்கப்பட்டன. (ஐ-159)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஞானவைரவர் ஆலய குடமுழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்ககாப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம்மாலை 4 மணிவரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக.31

வடமராட்சி வலயத்தில் உள்ள அல்வாய் சின்னத்தம்பிவித்தியாலயத்துக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

இலங்கைஅதிபர்சேவையில்தரம் 2, தரம் 3 உடையவர்களாக இருத்தல் வேண்டும், இலங்கை அதிபர் சேவையில் அதிபராகக் கடமையாற்றாதவர்களும்இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிஆகக்குறைந்ததுமூன்று வருடங்கள்கடமையாற்றக்கூடியவயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும். இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம், தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள்ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 10ஆம் திகதி ஆகும், விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுதல் வேண்டும், விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன்அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,300குடும்பங்கள் உள்ள இடத்துக்கு ஒரு கிராம அலுவலரே பணியில்

## தேவைகளைப்பெற இழுபறிப்படுகின்றோமென அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

கிளிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 200 பேர் வாழும் ஒரு கிராமத்துக்கு இன்றுவரை ஒரேயொரு கிராம அலுவலரே பணியாற்றுகிறார். அதனால் எந்தப் பணிகளையும் நிறைவு செய்ய முடியாது மக்களும் கிராம அலுவலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புண்ணைநீராவிக் கிராமத்துக்கே இந்த நிலை. அங்கு இரண்டு கிராம அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச செயலர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோரிடம் பல தடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் எந்தப் பயனும் கிட்டவில்லை என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புண்ணைநீராவிக் கிராமத்தில் மட்டும் 2 ஆயிரத்து 300 குடும்பங்களைச்சேர்ந்த 6 ஆயிரத்து 200 பேர் வாழ்கின்றோம். இந்தக் கிராமம் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியாகவே இன்றுவரை விளங்குகின்றது. ஒட்டு மொத்த சேவைகளுக்கும் ஒரு கிராம அலுவலரே சேவையாற்றுகின்றார்.

அவரது அலுவலகத்தில் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தே தேவைகளைப் பெறவேண்டியுள்ளது. இதனால் மணிக்கணக்கில் சில சந்தர்ப்பங்களில் நாள் கணக்கில் காவல் இருக்கவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. கிராம அலுவலரும் காலையில் அலுவலகம் வந்தால் பணிகளை முடித்து இரவு நேரமே வீடு திரும்புகிறார் என்றும், அதனால் அவரிடம் கேள்விதொடுக்கமுடியாதுள்ளது. கிராமத்தில் அதிக மக்கள் காணப்படுகின்றமையே வேலைப் பளுவுக்குக் காரணம். இலங்கையிலேயே அதிக மக்களைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவு எமது பிரிவாகவே இருக்கமுடியும். எனவே இந்தக் கிராமத்தில் 3 கிராம அலுவலர் பிரிவுகளை உருவாக்கி நாங்கள் தேவைகளை நிறைவேற்ற வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

உடனுக்குடன் இது பற்றிப் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளோம். பிரதேசமற்றும்மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்புக் குழுக்களின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளோம் என்றும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

"ஒரு கிராமஅலுவலர் பிரிவுக்கு 500 குடும்பங்கள் என்பதே அரசின் கொள்கையாகவுள்ளது. புண்ணைநீராவிக் கிராம அலுவலர் பிரிவை உடனடியாகவே மூன்று கிராம அலுவலர் பிரிவுகளாகப் பிரிக்குமாறு மாவட்டச் செயலகத்துக்கு பரிந்துரை செய்துள்ளோம்" என்று பிரதேச செயலர் கூறுகின்றார் என்றும் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

"குறித்த கிராம அலுவலர் பிரிவை 3 கிராம அலுவலர் பிரிவுகளாகப் பிரிப்பதற்குப் பல தடவைகள் முயற்சிக்கப்பட்டன. இதுவரை வெற்றியளிக்கவில்லை. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் மீண்டும் தொடர்புகொண்டு இது பற்றி ஆராயப்படும்" என்று மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்தார். (த-105)



### ஈருருளி கையளிப்பு

கிளிநொச்சி, ஓக. 31

மன்னார் ஈச்சளவக்கைப் பகுதியில் போரால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்கு உதவியாக ஈருருளி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உதவி செய்யும் அன்பர் ஒருவர் கிளிநொச்சி குமுழமுனை பங்குத்தந்தை மூலமாக ஈருருளியை நேற்றுமுன்தினம் வழங்கினார். (த-222)

*மாணவர் நலன்கருதி*

### பாடசாலைகளை துப்புரவு செய்யவும்

சாவகச்சேரி, ஓக.31

மாணவர்களின் நலன் கருதி பாடசாலைகளில் துப்புரவுகளை மேற்கொண்டு மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளனர்.

ஒரு மாதத்தின் பின்னர் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் நாளைமறுதினம் 2ஆம் திகதிதிறக்கப்படவுள்ளன. தற்போது மழை பெய்து வருகின்றமையால் பாடசாலை வளாகங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய தண்ணீர் ஏந்து பொருள்கள் மற்றும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படுகின்றன. மாணவர்களின் நலன் கருதி பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் இவற்றை துப்புரவு செய்யுமாறு அறிவித்துள்ளனர். அத்துடன் அண்மைக்காலமாக பல இடங்களில் கருங்குளவிகள் தாக்கம் அததிகம் உள்ளதால் ஒரு மாதமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் கருங்குளவிகள் கூடு கட்ட வாய்ப்பு உள்ளது. எனவே இது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு பாடசாலை அதிபர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-9)

### சென்.மேரிஸ் மைதான சீரமைப்புக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்ப்பாணம் நாவாந்துறை 11 ஆம் வட்டாரத்திலுள்ள நாவாந்துறை சென்.மேரிஸ் மைதானம் 2 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டின் பரிந்துரையில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசாவின் கிராம அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் இது சீரமைக்கப்படவுள்ளது.

குறித்த நிதி ஒதுக்கீட்டுக்கமைய யாழ்ப்பாண மாநகரமுதல்வர்ஆனல்ட் அங்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நட்டு சீரமைப்புப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர், 11ஆம் வட்டார மாநகர சபை உறுப்பினர்கள், குறித்த பகுதியின் கிராம அலுவலர், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், இளைஞர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (த)

# பெற்றோர்களின் செயற்பாட்டிலேயே பிள்ளைகளின் எதிர்காலம் இருக்கிறது

## குடும்பநல அலுவலர் திருமதி மேனகா தெரிவிப்பு

கொடிகாமம்,ஓக.31

பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது விளையாட்டுப் பொருளாக பெற்றோரைத்தான் பார்க்கின்றனர். இந்த நிலையில் தற்காலத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவிடுவது மிகக் குறைவு. இது அவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும். இதனாலேயே பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோரின் அன்பு கிடைக்காமல் தவறான வழியில் செல்கின்றனர். இவ்வாறு கொடிகாமம் குடும்பநல அலுவலர் திருமதி பா.மேனகா தெரிவித்தார்.

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெற்றோர்கள் ஆகிய நாம் பிள்ளைகளுக்கு முன்னால் உரத்த குரலில் சண்டையிடக் கூடாது. அது பிள்ளையின் மூளை வளர்ச்சியை பாதிக்கும்.

பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் சிறந்த சூழலை பெற்றோர்களே உருவாக்கி கொடுக்கவேண்டும். சிறுவயதில் இருந்தே உடலை மூடக்கூடியவாறு ஆடைகளைப் போட பழக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் தடைபோடக்கூடாது. அவர்களை அவர்கள் பாதையில் செல்லவிடவேண்டும். அதேநேரம் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் என்று அவர்களைக் கண்காணிக்க வேண்டும். பிள்ளைகள் படிக்க வேண்டும். எம்மில் பாசத்தை காட்ட வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டவுடன் தொலைபேசி, உந்துருளி என்பவற்றை பெற்றோர்கள் வாங்கி கொடுத்து, பிள்ளைகளை பிழையான வழிக்கு தள்ளுகிறார்கள்.

பிள்ளைகளுடன் நண்பர்களாக பழக வேண்டும். பிள்ளைகள் செய்யும் சின்னச் சின்ன நல்ல விடயங்களாக இருந்தாலும், அவர்களைப் பாராட்ட வேண்டும். இது அவர்களின் மூளை வளர்ச்சியைத் தூண்டும் செயற்பாடாக அமையும் என்றார். (ஜ-159)

# குண்டு வெடிப்பை தொடர்ந்து கைதான 64பேருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 31

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடையோர் என்ற குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட 64பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை அடுத்த மாதம் 12ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் இடம் பெற்றது. இதன்போதேஇந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில்பலர்சந்தேகத்தில்கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரேலியாவில் உள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைமையகத்தில்ஆயுதப்பயிற்சிபெற்றதாகக்கூறி, காத்தான்குடியைச் சேர்ந்த மேற்படி 64சந்தேகநபர்களும்கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவக்கருத்தரங்கை புறக்கணித்த மேற்குலகம்

கொழும்பு, ஓக. 31

இராணுவத்தின் ஏற்பாட்டில் நடக்கும்கொழும்புபாதுகாப்பு கருத்தரங்கை, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் புறக்கணித்துள்ளனர்.

இராணுவத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு2019பண்டாரநாயக்க மாநாட்டுமண்டபத்தில்நேற்றுமுன் தினம்காலைஆரம்பமானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தமாநாட்டைஆரம்பித்துவைத் தார். இராணுவத் தளபதி லெப். ஜெனரல்சவேந்திர சில்வா வரவேற் புரை நிகழ்த்த, பாதுகாப்பு செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொட சிறப்புரை நிகழ்த்தினார். இதைய டுத்து, பல்வேறுநாடுகளில் இருந்து வந்த நிபுணர்களும், உள்நாட்டு வளவாளர்களும்உரையாற்றினர்.

இந்தபாதுகாப்புக்கருத்தரங்கில்42 நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 800 பேர் பங்கேற்றுள்ளதாக இரா ணுவம் கூறியுள்ளது.

எனினும், தொடக்கநிகழ்வில்அமெ ரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடு களின் தூதுவர்கள், இராஜதந்திரி கள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொள்ளவில்லை. புதிய இராணுவத்தளபதியாக போர்க்குற் றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதற்கு அமெரிக் காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடு களும் எதிர்ப்பை வெளிப்படுத்தி யிருந்தன.

இந்தநிலையிலேயேபுதிய இராணு வத் தளபதியின் தலைமையில் நடக் கும்இந்தபாதுகாப்புக்கருத்தரங்கில் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரி களும்,பாதுகாப்புஆலோசகர்களும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பி டத்தக்கது. (ஒ,5)

# கோத்தாதான் வேட்பாளர் மாற்றம் எதுவுமில்லை

## மகிந்த ராஜபக்ச திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 31

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச தலைவர் வேட்பா ளரை நாம் ஒருபோதும் மாற்ற மாட்டோம். அந்த எண் ணமும் எமக்கு இல்லை. இவ் வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரி வித்துள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாக கோத்தபாய ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலர் உள்ளிட்ட குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட் சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான பேச்சும் வெற்றிகரமாக நிறைவுற்றி ருந்தது. இந்த நிலையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் மாற்றப்பட லாம் என்று தகவல்கள் அரசல்புரசலாக வெளியாகியி ருந்த நிலையிலேயே மேற்கண்டவாறு மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலை வர் வேட்பாளருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிச்சயம் ஆதரவுவழங்கும். பொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சரியான நேரத்தில் அறிவிக்கப் பட்டுள்ளார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற் பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே இன்னும் அரச தலைவர் வேட்பாளரை அவர்கள் அறிவிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுமக்கள் முன்ன ணியும்ஒன்றிணையாது. இருப்பினும்தேர்தலின்போது இருகட்சிகளையும்அடையாளம்கண்டு, அரசதலைவர் வேட்பாளரை வெற்றியடைவதற்கான ஒப்பந்தமொன் றைச் செய்யவுள்ளோம்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி குறித்து பெரும்பா லான மக்களுக்கு பெரிய நம்பிக்கை காணப்படுகிறது. இதனை இன்னும் பலப்படுத்தி, கட்சிகளுடன் கூட்டணி அமைத்துஎதிர்வரும்சகலதேர்தல்களிலும்வெற்றிபெறு வோம். அத்துடன் அரச தலைவர் வேட்பாளரை மாற்றும் எண்ணம் எங்களுக்கு இல்லை - என்றார். (ஒ,5)

# கோத்தாவை தோற்கடிக்கும் சூத்திரம் தயார்

## ராஜித தெரிவிப்பு

*கொழும்பு, ஓக. 31*

*எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தனது குடும்ப உறுப்பினரை களமிறக்கியதைப் போன்று குடும்பஉறுப்பினரைக்களமிறக்கவேண்டியதேவை எமக்கு கிடையாது. பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச வைத் தோல்வியடையச் செய்யும் சூத்திரம் தயா ரிக்கப்பட்டுள்ளது.*

விரைவில் தகுந்த பதிலடி வழங்கப் படும். தமிழ் மக்களின் முழுமை யான ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி நிரந்தர பலமான ஒரு தலை மைத்துவத்தைமுதலில்உருவாக்கி அதனூடாகஜனநாயகமீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு நிச்சயம் தண் டனை பெற்றுக்கொடுக்கப்படும்;. இவ்வாறு அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தி னம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள்சந்திப்பில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதேமேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகதேசியமுன்னணிக்கான யாப்பை உருவாக்கும் பணிகள் முழுமையடைந்துள்ளன. ஜனநா யகதேசியக்கூட்டணிகைச்சாத்திடப் படும் போது ஐக்கிய தேசியக் கட்சி யின் அரச தலைவர் வேட்பாளர் அறிவிக்கப்படுவார். புதியஅரசியல் பயணத்தை நோக்கிய கொள்கை திட்டம் உருவாக்கப்பட வேண்டிய தேவை காணப்படுப்படுகிறது. கொள்கைத் திட்டம் உருவாக்கலில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்து வப்ப டுத்தும் அரசியல்வாதிகளின் பரிந் துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். வீதிகளில்கோசம் எழுப்பி அரச தலைவர் வேட்பாளர் களைத் தெரிவு செய்ய முடியாது. கட்சியின் கொள்கைகளுக்கு அப் பால் சென்று செயற்படுபவர்க ளுக்குஎதிராகஒழுக்காற்றுநடவடிக் கைகள்முன்னெடுக்கப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு தேர்தல் பரப் புரை மேடைகளில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத் தையும் முழுமையாக மறந்து விட் டார் - என்றார். (ஒ,5)

# வெற்றியாளரைத்தான் வேட்பாளராக்குவோம்

## மங்கள சூளுரை

கொழும்பு, ஓக. 31

எமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக தெரிவு செய்யப்படு பவர் முழுமையான வெற்றி யாளராக இருப்பார் என்று நிதிய மைச்சர் மங்கள சமரவீர தெரிவித் தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுகருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளர் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் சிறந்த முடிவுக்கு வருவதற்கான திறன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு என்று நம்புகின்றேன்.

அந்தவகையின் எமது கட்சியின் அரசதலைவர்வேட்பாளராகதெரிவு செய்யப்படுபவர் முழுமையான வெற்றியாளராகஇருப்பார். மேலும் ஜனநாயகத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் சிறந்த ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.

இதேவேளை, நலிவடைந்திருந்த பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் நாம் முன்னோக்கிக் கொண்டு வந்துள்ளோம். கிராம எழுச்சித்திட்டம்மிகவும்திறமையான மற்றும் துரிதப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டமாக தற்போது மாறியுள்ளது. இலங்கையில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஆண்டுக்கு 400 மில்லியன் ரூபா ஒதுக்கும் மேம்பாட்டு திட்டமாகும் - என்றார். (ஒ,5)

# கோத்தபாயவுக்கு இணைப்பேச்சாளர்கள்

கொழும்பு, ஓக. 31

சிறிலங்காபொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள்செயலர்கோத் தபாய ராஜபக்சவுக்கு இணைப் பேச்சாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பி னர்களான கெஹலிய ரம்புக்வெல, டலஸ் அழ கப்பெரும ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். கோத்தபாய ராஜபக்ச ஊடகவியலாளர்களை எதிர்கொள்வதற்குத் தவிர்த்துவருவதாகக்குற் றஞ் சுமத்தப்பட்டு வரும் நிலையிலேயே, கோத்த பாயவுக்கு இணைப் பேச் சாளர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். (ஒ,5)

# மக்கள் வரிப் பணத்தில் வாழும் அரச தலைவராக இருக்கமாட்டேன்

கொழும்பு, ஓக. 31

பொதுமக்களின்வரிப்பணத்தில் வாழும்அரசதலைவராகஇருக்க விரும்பவில்லை யென்று அமைச்சர்சஜித்பிரேமதாசதெரி வித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

நான்மாளிகை அரசியலை [illegible] றாகநிராகரிக்கின்றேன். [illegible] வருடத்தின் 365 நாள்களும், நாள் ஒன்றின் 24 மணித்தியா லங்களும் மக்கள் சேவையில் ஈடுபடவே விரும்புகின்றேன். பணம் அல்லது பிற சலுகை [illegible] அல்ல. அவ்வாறான [illegible] மைக்கு ஒருபோதும் என்னை மாற்றிக்கொள்ளமாட்டேன். அத்துடன் மக்களின் வரி பணத் தில் வாழும் அரசியல்வாதிகள். எந்தவொரு விடயங்களிலும் தீர்மானம் எடுக்கும்போது, மக் கள் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இதேவேளை- நாட்டிலுள்ள விவசாயிகளின் உயிரை பாது காக்க அவர்களின் [illegible] உற்பத்திக ளுக்குசிறந்தவிலையை, எதிர்வ ரும் நவம்பர் மாதம் உருவாகப் போகும் புதிய அரசின் ஊடாக வழங்குவேன்-என்றார். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடத்தல்! நடுவானில் தடுப்பு

கொழும்பு, ஓக. 31

இலங்கை தமிழ் குடும்பம் ஒன்றை நாடு கடத்தும் ஆஸ்திரேலிய அரசின் நடவடிக்கையை, அந்தநாட்டு நீதி மன்றம் நடுவானில் தடுத்து நிறுத்தியுள்ளது.



நடேசலிங்கம்- பிரியா தம்பதியினரும் அவர்களது இரு குழந்தைகளும் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில், சிறப்பு வானூர்தியில் ஏற்றப்பட்டுவானூர்திபுறப்பட்டபின்னர் நீதிமன்றம் அவர்களை நாடு கடத்துவதை தடுக்கும் உத்தரவை பிறப்பித்தது என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நடேசலிங்கம்- பிரியா தம்பதியினரைக் குழந்தைகளுடன் ஆஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு பிரிவி னர் நேற்றுமுன்தினம்இரவுமெல்போர்ன் தடுப்பு முகாமிலிருந்து வானூர்தி நிலையத்துக்கு இலங்கைக்குநாடு கடத்துவதற்காக அழைத்துச்சென்றுள்ளனர். இந்தத் தகவல் கேள்விப்பட்டதமிழ்தம்பதிகளுக்கு ஆதரவான மக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் வானூர்தி நிலையத்துக்கு விரைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை நடேசலிங்கம்-பிரியா தம்பதியினரின் சட்டத்தரணி கரீனா போர்ட்டின் சட்டத்தரணி மேற்கொண்ட அவசர முயற்சிகளை தொடர்ந்து நீதிமன்றம் தமிழ்குடும்பத்தைவெளியேற்றுவதற்கு இடைக்கால தடைவிதித்துள்ளது. நீதிபதியொருவர் தொலைபேசி மூலம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவு கிடைப்பதற்கு முன்னரே வானூர்தி புறப்பட்டு விட்டதாகவும்நீதிமன்றஉத்தரவை தொடர்ந்து வானூர்தி நடுவானில் டார்வினுக்கு திரும்பியுள்ளதாகவும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை பிரியாவை அதிகாரிகள் பலவந்தமாக வானூர்திக்குள் இழுத்துச் சென்றனர் என்று வானூர்தி நிலையத்தில்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எது குறித்தும் அக்கறையின்றி பிரியாவை இழுத்துச் சென்றனர், அவர் கதறினார். இரு குழந்தைகளும் கதறினார்கள். அங்கு மிகவும் மனதை தொடும் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## கோத்தாவுடன் நெருங்குகிறது சிறிலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஓக. 31

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர் வேட்பாளரான கோத்தபாய ராஜபக்சவுடன் தனியாக புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

பொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர்வேட்பாளரான கோத்தபாய ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களான மகிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இரண்டுகட்சிகளுக்கும்இடையில்கூட்டணிஅமைப்பது குறித்துமகிந்தராஜபக்சவும்மைத்திரிபாலசிறிசேனவும் பேச்சுக்களை நடத்தியதை அடுத்து, இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்துடன், கோத்தபாய ராஜபக்சவுடன் தனியான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ள சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் விருப்பம் வெளியிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ.5)

## புத்தரால் பெண்ணுக்கு வந்தது சோதனை

கொழும்பு, ஓக. 31

புத்தரின் உருவத்தை ஒத்த படம் பொறிக்கப்பட்ட சேலை அணிந்த பெண் ஒருவர் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். புத்தரின்உருவத்தைஒத்தபடம்பொறிக்கப்பட்ட சேலையை அணிந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணம் செல்வதற்காக திருகோணமலை பேருந்துநிலையத்தில்காத்திருந்துள்ளார். பெண்ணின் சேலையைக் கண்ட அந்தப் பகுதியைச் சேர்ந்ததேரர் உள்ளிட்ட சிலர் அந்த பெண்ணிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சம்பவஇடத்துக்குபொலிஸாரும்வந்தநிலையில், புத்தபெருமானின்உருவத்தைஒத்தபடம்பொறிக்கப்பட்ட சேலை அணிந்த பெண் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கிருந்தவர்கள் பொலிஸாரிடம்கோரியுள்ளனர். இதனையடுத்து புத்தரின் உருவம் பொறிக்கப்பட்ட சேலையை அணிந்தபெண்ணும், மற்றுமொருவரும்பொலிஸ் நிலையத்துக்குஅழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கடந்த மே மாதம் கண்டி ஹசலக பிரதேசத்தில் முஸ்லிம் பெண் ஒருவர் பௌத்த தர்மசக்கரத்தை ஒத்த உடை அணிந்திருந்தாகக் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில்முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தார். பின்னர், அது பௌத்த தர்மசக்கரம் இல்லை என்றும், கப்பல் மாலுமிகளின் சுக்கானை ஒத்தது எனவும் தெரிவிக்கப்பட்டுஅவர்விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



## அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கும் 'குப்பை ராணி'

கொழும்பு, ஓக. 31

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சோஷலிஸக் கட்சி பெண் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. பிரபல சூழலியலாளரான கலாநிதி அஜந்தா பெரேரா என்பவரே, சோஷலிக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக அரச தலைவர் தேர்தலில் பெண் ஒருவர் போட்டியிடவுள்ளார்.

கடைசியாக, 1999ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் போட்டியிட்டு, இரண்டாவது முறையாக வெற்றி பெற்றிருந்தார்.

'குப்பை ராணி' ஜேர்மனியில் பயிற்சி பெற்ற சுற்றுச்சூழல் விஞ்ஞானியான கலாநிதி அஜந்தா பெரேராவே, இலங்கையில் முறையான கழிவு முகாமைத்துவத்துக்காக போராடி வருகிறார்.

குப்பை சேகரிப்பாளர்களுடனான அவரது பணிக்காக, அவர் 'குப்பை ராணி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். (ஒ.5)

## கொழும்பை வந்தடைந்தது ஐரோப்பிய ஒன்றியக் குழு

கொழும்பு, ஓக. 31

இலங்கையில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் நடைமுறை குறித்து உண்மையைக் கண்டறிய ஐரோப்பிய ஒன்றியக் குழு இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழு அதிகாரிகளையும், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையுடன் தொடர்புடைய தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போதுமனிதஉரிமைகள்தொடர்பானவிடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் இந்தப் பயணம் சிறப்புப் பயணம், இல்லையெனவும், வருடத்துக்கு ஒருமுறை வழமையாக இடம்பெறும் பயண மாகவே கருதப்படுவதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

## பலாலியிலிருந்தும் சேவைகளை முன்னெடுக்கவுள்ள 'பிட்ஸ் எயர்'

கொழும்பு, ஓக. 31

கொழும்புஇரத்மலானைவானூர்தி நிலையத்தில் இருந்து, பிட்ஸ் எயர் நிறுவனம், முதலாவதுவெளிநாட்டு பயணிகள் வானூர்திச் சேவையை ஆரம்பித்துள்ளது. இரத்மலானையில் இருந்து இந்தியாவின் விசாகப்பட்டினம் வானூர்தி நிலையத்துக்கானசேவைகடந்தசெவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பலாலியிலிருந்தும்எதிர்காலத்தில்சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இரத்மலானையில் இருந்து புறப்பட்ட, பிட்ஸ் எயர் நிறுவனத்தின் 70 ஆசனங்களைக் கொண்ட வானூர்தி காலை 9.10 மணியளவில்விசாகப்பட்டினத்தை சென்றடைந்தது. முன்னர், எக்ஸ்போ எயர் என்ற பெயரில் உள்நாட்டு வானூர்திசேவைகளைமேற்கொண்ட நிறுவனமே தற்போது, பிட்ஸ் எயர் நிறுவனம்என்றபெயரில்உள்நாட்டு பயணிகள்வானூர்திசேவைகளையும், வெளிநாடுகளுக்கான சரக்கு வானூர்தி சேவைகளையும் நடத்தி வருகிறது. பலாலி, மட்டக்களப்பு வானூர்தி நிலைய அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததும், இங்கிருந்து பயணிகள்வானூர்திசேவைகளை ஆரம்பிக்கவும், பிட்ஸ் எயர் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் தரப்புக்கு சூடு வைத்த ரணில்

## புது சர்ச்சை கிளம்பியது

கொழும்பு, ஓக. 31

அரச தலைவர் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் வரை வேட்பாளரை அறிவிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் கூறப்பட்டிருக்கவில்லை என்று அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட செயலர் நிசங்க நாணயக்கார கூறியுள்ளது போன்ற விதிமுறை கட்சியின் யாப்பில் இல்லை. அவ்வாறு எங்கு கூறப்பட்டுள்ளது என்பதை அவர் நிரூபிக்க வேண்டும் என்று அஜித் பெரேரா கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு அமைய, தேர்தல் ஆணைக்குழு அரச தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கோரிய பின்னரே, வேட்பாளரை அறிவிக்க முடியும். முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை எவ்வாறு பெயரிடுவது என்பது குறித்த சிறப்பு ஏற்பாட்டை உள்ளடக்கியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு அமைய கட்சியின் மையக்குழு, அரச தலைவர் வேட்பாளரின் பெயரை முன்வைப்பதற்காக ஒரு வேட்புமனுக் குழுவை நியமிக்க வேண்டும். நியமனக் குழு தனது முடிவை மையச் செயற்குழுவிடம் சமர்ப்பிக்கும். அந்தப் பெயரை மையச் செயற்குழுஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலர் நிசங்க நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பதிலளித்துள்ள அஜித் பி பெரேரா, கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் தனது பரப்புரையை திட்டமிட போதுமானநேரம் இருக்க வேண்டும். எனவே, பொருத்தமான வேட்பாளரைக் கண்டுபிடிப்பதை கட்சி தாமதப்படுத்த முடியாது. மக்களை ஏமாற்றவும், அரச தலைவர் தேர்தலில் கட்சி வெற்றி பெறுவதைத் தடுக்கவும் நிசங்க நாணயக்கார முயற்சிப்பதாகத் தெரிகிறது. அவ்வாறாயின் அவர் சட்ட செயலர்பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

ஒழுக்காற்று நடவடிக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் விஜேயதாச ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இவர்களுக்கு எதிரான விசாரணைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலாளர் நிசங்க நாணயக்கார கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அத்துரலிய ரத்ன தேரரும், விஜேயதாசராஜபக்சவும் நாடாளுமன்றத்தில் சுதந்திரமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்து, எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்த்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

கேலிச்சித்திரம்



# ஹக்கீமுடன் அலைபேசியில் அளவளாவிய கோத்தபாய

கொழும்பு, ஓக. 31

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்போது, கோத்தபாய ராஜபக்சவுக்கு அமைச்சர் ஹக்கீம் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. எனினும், இந்தப் பேச்சு தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது. ஐக்கிய தேசியக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளது. கடைசியாக நடந்த மூன்று அரச தலைவர் தேர்தல்களிலும் இந்தக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி நிறுத்திய வேட்பாளரையே ஆதரித்து வந்தது. (ஒ.5)

சு.கவில் பதவியிறக்கப்பட்ட

# திசாநாயக்க, டிலான் மகிந்தவிடம் தஞ்சம்



கொழும்பு, ஓக. 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களாக இருந்த எஸ்.பி.திசநாயக்கவும், டிலான் பெரேராவும் மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் நேற்று இணைந்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவிடம் இருந்து கட்சியின் உறுப்புரிமை அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கடந்த 11ஆம் திகதி நடந்த பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில், கட்சியின் கட்டுப்பாட்டை மீறி பங்கேற்ற எஸ்.பி.திசநாயக்க, சுதந்திரக் கட்சி பொருளாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

டிலான் பெரேராவும் மையக் குழுவில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்தே அவர்கள் பொதுமக்கள் முன்னணியில் இணைந்தனர். (ஒ.5)

# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இரவு விருந்தளித்தது ஐ.தே.க.

கொழும்பு, ஓக. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த இராப்போசன விருந்தில் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில் இந்த இராப்போசன விருந்து இடம்பெற்றது.

இந்த விருந்துக்கு 12 நாடுகளின் தூதுவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதன்போது, எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார் என்று கூறப்படுகிறது. (ஒ.5)

# ஐ.தே.கவின் வேட்பாளரை விரைவில் அறிவிப்பேன்

## இராஜதந்திரிகளுக்கு இராப்போசன விருந்தில் உறுதியளித்தார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 31

மாலைதீவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், அரச தலைவர் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை வெளியிடவுள்ளதாக, வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இராப்போசன விருந்துடன் சந்தித்துப் பேசியுள்ளார். அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதில் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே உள்ளிட்ட ஸ்கன்டிநேவிய நாடுகளின் தூதுவர்கள் பலரும், இராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர். ஐக்கிய தேசிய முன்னணியின், அரச தலைவர் வேட்பாளர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போதே, மாலைதீவுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ள பயணத்தின் பின்னர், புதிய கூட்டணி மற்றும் அதன் வேட்பாளர் குறித்த அறிவிப்பை வெளியிடப்போவதாக, ரணில் விக்கிரமசிங்க, இராஜதந்திரிகளிடம் எடுத்துக் கூறினார். இந்தச் சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்து கொண்டிருந்தார். அதேவேளை, ஜனநாயக தேசிய முன்னணியின் யாப்பு வரையும் பணிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்துள்ளன. இதன்படி கூட்டணியின் தலைமைத்துவ சபையின் தலைவராக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடாநாட்டுக்கான மாற்றுக் குடிநீர்த்திட்டம்

*கப்பூதுவெளியில்*



யாழ்ப்பாணம்,ஓக.31
மழை நீரைச் சேகரித்து, குடி தண்ணீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் காலை வடமராட்சியில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் நீண்டகாலமாக முகங்கொடுத்து வரும் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வளிக்கும் நோக்குடன், இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக இரண்டு பில்லியன் ரூபாநிதிசெலவிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் முன்னெடுக்கப் படும்இந்தவேலைத்திட்டம் இரண்டு வருடங்களில் முழுமை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

"யாழ்ப்பாணத்தில் ஆறு அல்லது சிறிய மற்றும் பெரியளவிலானநீர்த்தேக்கங்கள் எதுவும் இல்லை. இதனால் வருடந்தோறும் கிடைக்கப் பெறும் மழை நீரைச் சேகரிப்பதற்கான வசதிகள் எதுவும் இங்கு அமையப்பெறவில்லை. மக்களின் நீர்த்தேவை நிலத்தடி நீரை அடிப்படையாகக்கொண்டே முழுமை செய்யப்படுகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சியின் ஒரு பகுதி வடமராட்சி, உப்பாறுமற்றும்ஆனையிறவு ஆகிய மூன்று களப்புகளில் தங்கியிருப்பதுடன், அந்தநீரும்எவ்விததேவைகளுக்கும் பயன்படுத்தப்படாது கடலுக்குச் செல்கின்றது. அந்த நீரை மிக இலகுவாகச் சேகரிப்பதற்கு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

" என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது. ஆரம்ப நிகழ்வில் அமைச்சர்பீ.ஹரிசன், வட மாகாணஆளுநர்கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பி னர்கள் மாகாண மக்கள் பிரதி நிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
(க-21,26)

# பரு. துறைமுகத்துக்கு மைத்திரிபால அடிக்கல்



வடமராட்சி, ஓக.31
பருத்தித்துறை துறைமுக அபிவிருத்திக்கான அடிக்கல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுக் காலை 9.51 மணியளவில் நடப்பட்டது.

அரச தரப்புக் குழுவினர் பருத்தித்துறை துறைமுக வாசலில், கீரிமலை வீதியில் வைத்து வரவேற்கப்பட்டனர்.

நுழைவாசலில் அபிவிருத்தி செய்யப் படும் பருத்தித்துறை துறைமுகத்தின் உள்ளடக்கம் கொண்டதான பெயர்பலகையைத் திரை நீக்கம் செய்து, துறைமுகத்துக்கு அடிக்கல் நட்டார்.

மீன்பிடிஅமைச்சின்செயலர்றோய்ச்சந்திரா வரவேற்புரை நிகழ்த்தியதும், நாடாளுமன்றஉறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், விவசாய, மீன்பிடி நீரியியல் அமைச்சர் பி.ஹரிசன்ஆகியோர்உரையாற்றினர். தபால்துறைஅமைச்சர்எம்.எம்.ஹலிம், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், நாடாளுமன்றஉறுப்பினர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் யோசப் இருதயராசா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆயிரத்து 600 பில்லியன் ரூபா செலவில் மீன்பிடிஅமைச்சின்உதவியுடன்நவீன தரத்தில் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களுக்குஅழைப்பிதழ்வழங்கப்பட்டவில்லை என்று நகரசபை உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைமந்திகைபகுதிகளில்நேற்றுக்காலைபாதுகாப்புபலப்படுத்தப்பட்டிருந்தது. வீதி ஓரங்களில் ஈருருளி முதல் அனைத்து வாகனங்களும் நிறுத்தி வைக்கத்தடை விதிக்கப்பட்டது. தனித் தனியாக இடங்களில் நின்று சேவைகளை நடத்தி வந்த இ.போ.ச, தனியார் பேருந்துகள் நேற்று நண்பகல் வரை ஒரே இடத்தில் தரித்து நின்றே சேவைகளை நடத்தின.

நேற்று காலை முதல் முற்பகல் 11 மணி வரை பருத்தித்துறை மந்திகை பகுதி வீதிகள் வெறிச் சோடிக்காணப்பட்டன. முற்பகல் 11 மணிக்கு பின்னர் நிலமை வழமைக்குத் திரும்பியது.

நிகழ்வில்மீன்பிடிஅமைச்சர்பி.ஹரிசன் நீண்டஉரையைசிங்களத்தில்ஆற்றியிருந்தார். அவரது உரை நிறைவுற்றதும் மொழி பெயர்ப்பாளர் மிகச் சுருக்கமாக அதனைதமிழில்தெரிவித்தார். எனினும் சில முக்கிய விடயங்கள் தெரிவிக்கப்படவில்லை. 300 படகுகளுக்குத் தேவையானவசதிகளைஒரேநேரத்தில்பெற்றுக் கொள்ளக்கூடிய துறைமுகத்தின் இறங்குதுறை 7.1 ஹெக்ரேயர் பரப்பளவையும், துறைமுகப் படுக்கை 18.6 ஹெக்ரேயர் பரப்பையும் கொண்டுள்ளதுடன், 880 மீற்றர் நீளத்தையும் 480 மீற்றர் அகலத்தையும் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

உலகிலுள்ள நவீன ரக மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல், பிடிக்கப்படும்மீன்களைகரைசேர்த்தல், எரிபொருள் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், படகுகளைப் பழுதுபார்த்தல், ஐஸ் மற்றும் குளிர்சாதன வசதிகள், படகுகளுக்கான இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளல், மீன் விற்பனை, வலை தயாரிப்பு, கடைத்தொகுதி, கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான வசதிகள், கரையோரப் பாதுகாப்புச் சேவைகள், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளின் சேவைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் இந்த மீன்பிடித் துறைமுகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
(க-173,26,21)






## தொழில்வழிகாட்டல் மையம் திறப்பு

'இளையோரின் எதிர்கால நுழைவாயில்' ஸ்மார்ட் சிறிலங்கா தொழில் வழிகாட்டல் மையங்களை உருவாக்கும்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ்யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப் பட்ட, யாழ். மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திறந்துவைத்தார். (ஒ.21,26,5)

## கூட்டுறவு வங்கி கைதடியில் திறப்பு



பேண்தகு கூட்டுறவு வங்கி முறைமையின் கீழ் வட மாகாணமக்களின்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் யாழ்ப்பாணம் கைதடியில் அமைக்கப்பட்டுள்ள வட மாகாண கூட்டுறவு அபிவிருத்திவங்கியின்தலைமையகக்கட்டடத்தை அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன நேற்று முற்பகல் திறந்து வைத்தார். (ஒ.21,26,5)

## நீர்மாநாட்டை ஆரம்பித்தார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஓக.31
யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் இடம்பெற்ற பன்னாட்டு வடக்கு நீர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் கலந்துகொண்டார். இந்தமாநாடுநாளையும்இடம்பெறும். இந்தமாநாட்டில்வடக்கு மாகாணமக்கள்முகங்கொடுக்கும் நீர்ப்பிரச்சினைகள் தொடர்பில் ஆழமாக ஆய்வு செய்தல், அதற்காகவழங்கக்கூடிய குறுங்கால, இடைக்காலமற்றும் நீண்டகாலதீர்வுகளைக்கண்டறிதல், உத்தேச நீர்வேலைத் திட்டத்துக்கு பன்னாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.21,26,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவைக் கண்டு அஞ்சுகின்றதாம் அரசு!

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஓக.31

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியால்பரிந்துரைக்கப்பட்டகோத்தபாய ராஜபக்சவைக் கண்டு இந்த அரசு கதிகலங்குகின்றது. அதனால்தான்கட்டுக்கதைகளைரணில்தரப்பினர்அவிழ்த்துவிடுகின்றனர். எமது மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. எமது அரச தலைவர் வேட்பாளர்கோத்தபாய ராஜபக்சவே. அவரின்பெயர்மாற்றப்படவே மாட்டாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்தராஜபக்சதெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று தேசிய மாணிக்க மற்றும் ஆபரண கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பொது மக்கள் முன்னணி இணைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருகட்சிகளின் அடையாளத்தையும் பாதுகாத்து, எமது அரச தலைவர் வேட்பாளரை வெல்லவைக்கவிரும்புகின்றோம். ஆயினும்கூடசிறிலங்காசுதந்திரக் கட்சியுடனான எங்கள் கலந்துரையாடல்களும், கோத்தபாயராஜபக்சவுடன் அவர்கள் நடத்திய கலந்துரையாடல்களும் மிகவும் வெற்றிகரமாக உள்ளன.

இந்தஅரசுஏற்கனவேகோத்தபாய ராஜபக்சவைப்பார்த்துப்பயந்துள்ளது. அதனால்தான் எங்களைத் தாக்கும் வேலைகளைச் செய்கின்றனர். ஆனால் சரியான வேட்பாளரை சரியான நேரத்தில் நாம் வழங்கினோம். மக்கள் விடுதலை முன்னணியும் தனது வேட்பாளரை முன்வைத்தது. நெருக்கடி காரணமாக தனது வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி அறிவிக்கவில்லை. இப்போதுஅவர்கள்கட்சியாப்பை முன்வைத்து நெருக்கடியைமறைக்கமுயற்சிக்கின்றனர் - என்றார். (எ-22)

# ஆண்டு நிறைவு விழா

கொடிகாமம், ஓக.31

நாவற்குழி காந்தி சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டுநிறைவுவிழாநாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காந்தி சனசமூக மண்டபத்தில்நிலையத்தலைவர் இ.இறட்ணகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலகக் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்சி.மதியழகனும், சிறப்புவிருந்தினராகசாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப், நாவற்குழி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி வே.மேகலிங்கம் ஆகியோரும்,கௌரவவிருந்தினராக யாழ்ப்பாணம் சம்பந்த் வங்கி முகாமையாளர் கி.குமணன், சாவகச்சேரி வேள்ட்விசன் திட்ட இணைப்பாளர்த.வசந்தநாயகம்,சாவகச்சேரிப்பிரதேசசபைஉறுப்பினர்களான கி.தங்கவேலு, க.லூர்துமேரி, புலம்பெயர் வாழ் நிர்வாகத் தலைவர் ஜெ.ஜெயபாலன் மற்றும் நிர்வாகச் செயலாளர் இ.ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-159)

# விநாயகர் சதுர்த்தி சிறப்பு தீர்த்தவாரி

யாழ்ப்பாணம், ஓக.31

கோப்பாய், இருபாலை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான விநாயகர், சதுர்த்தி சிறப்புத் தீர்த்தவாரி ஆவணிச் சதுர்த்தி தினமான எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. ஆலயத்தில் உள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு, கற்பகப் பிள்ளையார் தீர்த்தக் கேணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து பக்தர்கள் தங்கள் கைகளால் தீர்த்தவாரி நடத்தத் திருவருள் கூடியுள்ளது. அன்று மாலை 4 மணிமுதல் கற்பகப் பிள்ளையாருக்குச் சிறப்பு அபிசேகமும், சிறப்பு பூசை வழிபாடுகளும் நடைபெற்று, அன்று மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, எம்பெருமான் வீதியுலா வருவார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ)

NEWUTHAYAN.COM

# எதிர்காலத்தில் போர் என்பது முன்னறிவிப்புகளோடு வராது

## இந்திய பாதுகாப்பு ஆய்வாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.31

நான்காம்கட்ட ஈழப்போரின்வெற்றிக்கு அரசியல்இராஜதந்திரமற்றும்இராணுவ நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன. எதிர்காலம் என்பது எப்போதும் முன்கூட்டியே தீர்மானிக்க முடியாத தொன்றாகும். மற்றுமொருபோர்எவ்வித முன்னறிவிப்புக்களுடனும் வராது.

இவ்வாறு இந்தியாவைச் சேர்ந்த பாதுகாப்பு விவகார ஆய்வாளரும், ஊடக செயற்பாட்டாளருமான நிதின் கோகலே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நவீன போர்களைப் பொறுத்தமட்டில் அவற்றுக்குதொடக்கம்என்றோஅல்லது முடிவு என்றோ ஏதுமில்லை. தற்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மோதல்கள்மற்றும்முரண்நிலைகளின்தன்மையும்மாற்றமடைந்திருக்கின்றன. எதிர்காலம் என்பது எப்போதும் முன்கூட்டியே தீர்மா னிக்க முடியாத தொன்றாகும். அதனால் மற்றொரு போர் என்பது எந்தவித முன்னறிவிப்புக்களுடன் வராது. அது காலத்தைப் பொறுத்ததொன்றாகவே அமையும் - என்றார். (எ)

# மட்டு. இந்து மயானத்தில் இருந்து உடற்பாகத்தை அகற்ற பணிப்பு!

## மாவட்டச் செயலரின் செயலுக்கு அதிருப்தி தெரிவித்தது நீதிமன்று

மட்டக்களப்பு, ஓக.31

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய தாக்குதல்தாரியின் உடற்பாகங்களைமட்டக்களப்புகள்ளியன்காடுஇந்து மயானத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டது.

மருத்துவமனையில்வைக்கப்பட்டிருந்த தாக்குதல்தாரியின் உடற்பாகங்களை புதைப்பதில்சர்ச்சைநீடித்திருந்தது. உடற்பாகங்களைத் தமது பிரதேசத்தில் அடக்கம் செய்யக்கூடாது என்று முஸ்லிம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்தநிலையில் கடந்த 26ஆம் திகதி அவசர அவசரமாக மட்டக்களப்புக் கள்ளியன்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்டது. அதையடுத்து மக்கள் ஆர்ப்பாட்டம்மேற்கொண்டனர். இந்த விடயம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நேற்று இதுதொடர்பானவிசாரணைகள் நடைபெற்றன. வழக்கை விசாரித்த நீதிபதி, கள்ளியன்காடு இந்து மயானத்தில் உடற்பாகங்கள் அடக்கம் செய்யப்பட்டமைக்கு அதிருப்தி வெளியிட்டார். மாவட்டச் செயலரின் நடவடிக்கை தொடர்பாகவும் கடுமையாகச் சாடினார்.

பொதுமக்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில்மாவட்டத்தில்உள்ளமயானம் ஒன்றில் உடற்கூறுகளைப் புதைக்கவே நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்து மயானத்தில் புதைத்து மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்த நீதிமன்று உத்தரவிடவில்லை. மாவட்டச்செயலர்செய்த தவறே இந்தப்பிரச்சினைக்குக்காரணம் என்று நீதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்துமயானத்தில்இருந்துஉடனடியாக உடற்கூறுகளை அகற்றமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. நேற்று போதிய ஆதாரம் இல்லாததால் எதிர்வரும் திங்கட்கிழமை இந்து மயானத்தில் இருந்து உடற்பாகங்களை அகற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, உடற்பாகங்கள் புதைக்கப்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டம் நடத்த மக்களைத் தூண்டினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில்முற்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், மாநகர சபை உறுப்பினர் செல்வி சுசிலா உட்பட 5 பேரையும் பிணையில் செல்லவும் நீதிமன்று அனுமதித்தது. (எ)

# எல்பிட்டி பிரதேச சபை தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஓக.31

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள் ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பு மனுவை ஏற்றே நீதிமன்றம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக் குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாட்டிலுள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்ற நிலையில், எல்பிட்டிய பிரதேச சபைக்கான வாக்களிப்பு வேட்பு மனு தொடர்பில் நிலவும் பிரச்சினை காரணமாக உள்ளூராட்சித் தேர்தலில், எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்து, மேல்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தத் தேர்தல் தொடர்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தாக்கல் செய்த மனுவொன்றை ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தடையுத்தரவை நீதிமன்றம் பிறப்பித் திருந்தது.

இந்த மனு மீதான தீர்ப்பொன்றை வழங்கும் வரையில் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்த மேல் நீதிமன்றம் தடையுத்தரவு விதித்திருந்தது.

இந்தநிலையில், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பு மனுவை ஏற்று எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக் குழுவுக்கு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. இதேவேளை எல்பிட்டி பிரதேச சபைக்கான தேர்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் முதல் வாரத்தில் நடத்த உத்தேசித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா மீதான வழக்கு நாளாந்தம் விசாரணைக்கு

## இறுதி நேரத்தில் பிடி இறுகுகிறது

**கொழும்பு, ஓக. 31**

**முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஒவ்வொரு நாளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

டி.ஏ.ராஜபக்ச நினைவு மண்டபத்தை அமைப்பதற்காக அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய விவகாரத்தில், முதலாவது நிரந்தர மேல் நீதிதாய நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை இடம்பெறும்.

அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச இந்த மாதம் 11ஆம் திகதி அறிவிக்கப்பட்டார். அதன் பின்னர், கடந்த காலங்களில் நாட்டை உலுப்பிய, பன்னாட்டு மட்டத்தில் பேசு பொருளாக இருந்த 6 கொலைச் சம்பவங்களின் விசாரணை நிலமைகள் தொடர்பில் சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபரிடம் கோரியிருந்தார். அதில் 3 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஆயம் முன்னிலையில் விசாரணையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



இவ்வாறானதொரு நிலையிலேயே, அரச நிதி முறைகேடு தொடர்பான வழக்கும் தொடர் விசாரணைக்கு திகதியிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## செயற்குழு கூட்டம்

சாவகச்சேரி, ஓக. 31

கிளிநொச்சி, உருத்திரபுரம் காந்தி சேவா சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சோ.க.தம்பிப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் மகாத்மா காந்தியின் 150ஆவது ஜனன தினம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ள வேண்டும் என்று செயலாளர் அறிவித்துள்ளார். (எ-9)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஓக. 31

சாவகச்சேரி, நுணாவில் ஏ-9 வீதியில் இரு உந்துருளிகள் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று மாலை 4 மணியளவில் நடந்துள்ளது.

வவுனியா குட்செட் வீதியைச் சேர்ந்த 51வயது மற்றும் 45 வயதுடைய தம்பதியரே விபத்தில் காயமடைந்தனர்.

இவர்கள் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு உறவினர்களைப் பார்க்க வந்தபோதே விபத்தில் சிக்கியுள்ள னர்.

அவர்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் விபத்துக் குள்ளான மற்றைய உந்துருளியில் வந்தவர் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# அலங்காரக் கந்தனின் தீர்த்தோற்சவம் நேற்று







கொழும்பு, ஓக. 31

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் நேற்றுத் தீர்த்தத் திருவிழா சிறப்புற நடைபெற்றது.


காலை 6 மணியளவில் ஆரம்பமான பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வேல் பெருமான், வள்ளி, தெய்வானை, பிள்ளையார் மற்றும் அம்மன் சமே தரராய் காலை 7 மணிக்கு ஆலய தீர்த் தக் கேணியில் தீர்த்தமாடி பக்தர்களுக்கு அருட் காட்சி அளித்தார்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப் பெருமானின் அருள் வேண்டினர்.

அதேவேளை நேற்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கம் நடைபெற்றது.

அத்துடன் ஆலய மகோற்சவ திருவிழாக்கள் நிறைவடைகின்றன. (எ-37)







# பக்திபூர்வமாக நடைபெற்றது சந்நிதி முருகன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 31

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்று மாலை பக்திபூர்வமாகக் கொடியேற்றம் நடைபெற்று, முருகப் பெருமான் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார்.

கொடியேற்றத் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்தித்தனர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொங்கொங் விவகாரம் போராட்டத் தலைவர் கைது!


ஹொங்கொங்,ஒக.31
ஹொங்கொங் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களுள் ஒருவரான ஜோஷ்வா வாங் என்பவரைக் கடந்த வெள்ளிக்கிழமை ஹொங்கொங் பொலிஸார் கைது செய்தனர்.



இது குறித்த மேலும் தெரியவருவதாவது:
ஹொங்கொங் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரும் சமூகச்செயற்பாட்டாளருமான ஜோஷ்வா வாங் என்பவரைக் ஹொங்கொங் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்களிடையேயெபெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்டதை அவரது கட்சியான டிமோசிஸ்டோ உறுதிப்படுத்தியது. எங்கள் கட்சியின் பொதுச் செயலர் ஜோஷ்வா வாங் கைது செய்யப்பட்டார். இந்தக் கைது தொடர்பான வழக்கை எங்கள் வழக்கறிஞர்கள் கவனித்து வருகின்றனர் என்று அந்தக் கட்சி சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால், ஜோஷ்வா வாங் தொடர்பாக பொலிஸார் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

**பின்னணி**

பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தில் இருந்து ஹொங்கொங் விடுவிக்கப்பட்ட பின்னர் 1997ஆம் ஆண்டு சீனாவின் நிர்வாகப் பகுதிகளில் ஒன்றானது. சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஹொங்கொங் நாட்டுக்கெனத் தனியான பண அலகு, சட்டம், அரசமைப்பு எல்லாம் உள்ளன. இந்த நிலையில் ஹொங்கொங் குற்றவாளிகளைச் சீனாவுக்குப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்த தீர்மானத்தைக் கொணடு வந்தது ஹொங்கொங் நிர்வாகம். அதை நிரந்தரமாக நீக்கக்கோரியும், சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராகவும் ஹொங்கொங்கில் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளும் இந்தப் போராட்டங்களுக்கு ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதுவரை அங்கு 800 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.




## அனல் கக்க ஆரம்பித்தது இத்தாலியின் ஸ்ட்ராம்போலி

உரோம்,ஒக.31
2ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப்புடன் இருப்பதாகக் கருதப்படும் இத்தாலியில் உள்ள ஸ்ட்ராம்போலி எரிமலை சீற்றத்துடன் வெடித்துக் நெருப்புக் குழம்பைக் கக்கத் தொடங்கி உள்ளது. இந்த வாரத்தில் இரண்டாவது முறையாக இந்த எரிமலை சீற்றம் கொள்ள ஆரம்பித்துள்ளது. இத்தாலியின் தைரேனியன் கடல் பகுதியில் உள்ள ஸ்ட்ராம்போலித் தீவில் அமைந்துள்ள இந்த எரிமலை குமுறத் தொடங்கியுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.
எரிமலை வெடிப்பால், அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலம் சூழ்ந்துள்ளது. சிறிய அளவிலான வெடிப்புச் சத்தங்கள் ஏற்படுகின்றன. அதன் மேற்குப் பகுதியில் எரிமலைக் குழம்பு வடிந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
அந்தப் பகுதியை விட்டு உடனடியாக வெளியேறும்படி பொதுமக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை இந்த எரிமலை மிகப்பெரிய சத்தத்துடன் வெடித்து அதிக அளவிலான எரிமலைக் குழம்பை வெளியேற்றியதால் ஒருவர் சாவடைந்தும் ஒருவர் காயமடைந்தும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.




## அமெ.வைத் தாக்கவிருக்கிறது 'டொரியன்' புயல்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை 'டொரியன்' என்று பெயரிடப்பட்ட புயற் காற்றுத் தாக்கவிருப்பதாக அந்த நாட்டின் தேசிய புயல் எச்சரிக்கை நிலையம் செய்தி வெளியிட்டது. அந்த எச்சரிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாவது:
கரீபியன் தீவுகளுக்கு அருகே மையம் கொண்டிருந்த 'டொரியன்' புயல் அங்கிருந்து நகரத் தொடங்கியதால், போர்டோ ரிகோ, வெர்ஜின் தீவுகள் போன்ற இடங்களில் கடும் மழையும் காற்றும் காணப்பட்டன. இந்த நிலையில் அந்தப் புயல் புளோரிடா மாநிலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இது எதிர்வரும் திங்கட் கிழமை மத்திய புளோரிடாவில் கரையைக் கடக்கும். கரையை கடக்கும் போது மத்திய புளோரிடாவில் மணிக்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றுள்ளது. இதையடுத்து புளோரிடாவின் 26 மாவட்டங்களுக்கும் அந்த மாகாணத்தின் ஆளுநர் ரோன் டிசன்டிஸ், புயல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.




'பிரெக்ஸிட்' காரணமாக முடக்கப்படும் நிலையிலிருக்கின்ற நாடாளுமன்ற விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரிட்டனின் தலைநகர் லண்டனில், நாடாளுமன்றத்தை அண்மித்த வீடுகளுக்கு வெளியே மக்கள் போராட்டம் நடத்தினர்.

## சவூதி வானூர்தி நிலையம் மீது ஏமன் ஆயுததாரிகள் தாக்குதல்

றியாத்,ஒக.31
சவூதி அரேபியாவின் அபா வானூர்தி நிலையம் மீது ஏமனின் ஹவுத்தி ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.
இந்தத் தகவலை ஹவுத்திக் கிளர்ச்சியாளர்கள் நடத்தும் அல் மசிராஹ் செய்திச் சேவை உறுதிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தகவல் வெளிவரவில்லை.
இந்தத் தாக்குதல் குறித்து சவூதி தரப்பிலும் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. கடந்த சில மாதங்களாகச் சவூதியின் [illegible] வானூர்திநிலையம்மீதுஹவுத்தி ஆயுததாரிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

**பின்னணி**

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில், சன்னி பிரிவைச் [illegible] சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போர் நடக்கிறது. மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரேபியா செயற்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் பலர் பாதிக்கப்பட்டு, பலர் உணவில்லாமல் பஞ்சத்தில் தவித்ததால் சவூதி நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்தது. தொடர்ந்து ஹவுத்திப் போராளிகளின் வசமுள்ள பகுதியியில் சவூதி வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக சவூதிப் பகுதிகளில் ஹவுத்தி ஆயுததாரிகள் தாக்குதல் நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னொரு தியானன்மென் வேண்டாம்!

*சீனாவை எச்சரித்தார் ட்ரம்ப்*

வோஷிங்டன், ஓக.31

ஹொங்கொங் போராட்டம் தியானன்மென் படுகொலை போன்ற சம்பவத்துக்கு வழிவகுக்கும் என்பதை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டி, தனது கண்டனத்தைப் பதிவு செய்தார். ஹொங்கொங் போராட்டக்காரர்களை எச்சரிக்கும் விதமாகக் கடந்த வாரம் சீனாவின் அரச நாளிதழ், தியானன்மென் சம்பவத்தைக் குறிப்பிட்டு, அதை மீண்டும் செய்யவைத்துவிடாதீர்கள். சீனா அப்போது இருந்ததைவிட பலமாகவும், முதிர்ச்சியுடனும் இருக்கிறது எனச் செய்தி வெளியிட்டது.


இந்த நிலையில், குறித்த போராட்டத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்துப் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த ட்ரம்ப், சீனா வன்முறையைக் கையில் எடுத்தால், அதைப் பார்த்துக்கொண்டு அமெரிக்கா அமைதியாக இருக்காது. இருப்பினும், அது மற்றொரு தியானன்மென் படுகொலையாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சீனா அதைச் செய்ய முற்பட்டால் அமெரிக்கா - சீனா இடையிலான வர்த்தகப் போர் இன்னும் வலுவடையும்- என்றார்.

**தியானன்மென் சம்பவம்**

சீனாவில் 1989ஆம் ஆண்டு ஜனநாயக ஆட்சி கோரி, மக்கள் போராட்டத்தில் குதித்தனர். சீனப் பொதுவுடைமைக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் எதிராக, மாபெரும் போராட்டம் வெடித்தது. பீஜிங்கில் உள்ள தியானன்மென் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தினர். அப்போதைய சீன அரசு இந்தப் போராட்டத்தை இரும்புக்கரம்கொண்டு ஒடுக்கியது. தியானன்மென் சதுக்கத்தில் இராணுவம் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். தியானன்மென் சம்பவம் இன்றும் சீன மக்களின் மனதில் ஆறாத வடுவாக இருக்கிறது.

## கொங்கோவில் தொடர்கிறது துயரம்

# 'எபோலா' தாக்கி 2000 பேர் சாவு!



சாயோ சல்வோடர், ஓக.31

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் எபோலா வைரஸ் தாக்கத்தின் காரணமாக இதுவரை 2ஆயிரம் பேர் சாவடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு எபோலா வைரஸ் கொங்கோவைத் தாக்கிப் பெரும் உயிர்ச் தேசத்தை ஏற்படுத்திய நிலையில், மீண்டும் அந்த வைரஸின் தாக்கம் அங்கு நீடித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்குக் கொங்கோவில் எபோலா வைரஸின் தாக்கத்தால் 2ஆயிரம் பேர் சாவடைந்தனர் என்றும்- கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - சுட்டிக்காட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டது கொங்கோ அரசு. அத்தோடு தடுப்பூசிகள் மூலம் சுமார் 70ஆயிரம் பேருக்கு மேல் இந்த நோய் பரவலில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினி, லைபீரியா, சியாரா லியோன் உட்பட 8 நாடுகளில் எபோலா வைரஸ் காய்ச்சல் பரவியது. இந்த நாடுகள் அனைத்திலுமாக எபாலோ வைரஸ் காய்ச்சலால் 15ஆயிரத்து 145 பேர் பாதிக்கப்பட்டனர். அதில், 5ஆயிரத்து 420 பேர் சாவடைந்தனர். கொங்கோவே இந்த வைரஸின் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக இருக்கிறது.






# கருணாநிதியை சாடிய வழக்குகளில் விடுவிக்கப்பட்டார் வைகோ

புதுடெல்லி, ஓக.31

தி.மு.காவின் தலைவர் மு. கருணாநிதி குறித்து அவதூறான கருத்துக்களைத் தெரிவித்ததாகக் கூறி, ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ மீது தொடரப்பட்ட வழக்குகளில் இருந்து அவரை விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

ம.தி.மு.கவை சிதைவுறச் செய்வதற்கு முதலமைச்சர் மு. கருணாநிதி முயற்சிப்பதாக 2006 ஆம் ஆண்டில், அப்போதைய தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்குக்கு வைகோ கடிதம் எழுதியதாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியானது. இதையடுத்து, அவர் மீது தமிழக அரசு அவதூறு வழக்குத் தொடர்ந்தது. 2009ஆம் ஆண்டில் இயக்குநர் பாரதிராஜாவின் அலுவலகம் தாக்கப்பட்டபோது, இதற்கும் தி.மு.க. தலைவர்தான் காரணம் என வைகோ பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியதாக மேலும் ஓர் அவதூறு வழக்கு அவர் மீது தொடரப்பட்டது. இந்த வழக்குகளிலிருந்தும் தன்னை விடுவிக்க வேண்டுமென வைகோ சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், பாரதிராஜாவின் அலுவலகம் தாக்கப்பட்டது தொடர்பான வழக்கிலிருந்து வைகோவை விடுவித்தது. 2006ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பளிப்பைத் தள்ளிவைக்க விரும்பவில்லை எனக் கூறிய நீதிபதி, வைகோ மீதான குற்றச்சாட்டுகள் சரிவர அரச தரப்பால் நிரூபிக்கப்படவில்லையெனக் கூறி வைகோவை விடுவிப்பதாகத் தீர்ப்பளித்தார்.

# காஷ்மீரில் இந்திய இராணுவம் அராஜகம் துன்புறுத்தப்படுகிறார்கள் காஷ்மீர் மக்கள்

புதுடெல்லி, ஓக.31

இந்திய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் காஷ்மீரின் சிறப்பு அரசமைப்பை நீக்கி, அந்தப் பிரதேசத்தை இரண்டாகப் பிரித்த பிறகு, அங்கு மக்கள் மீதான தாக்குதல் மற்றும் சித்திரவதை போன்றவற்றை பாதுகாப்பு படையினர் நடத்தி வருவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். தங்களைத் தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் தாக்குவதாகவும், தாக்கப்பட்டதாகவும், தங்களுக்கு மின்சார அதிர்ச்சி வழங்கப்பட்டதாகவும் பல கிராமவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்திய அரசின் இந்தச் செயலுக்கு எதிராகக் கிராமவாசிகள் போராடக்கூடாது என்ற அச்சத்தை ஏற்படுத்தவே இந்தியப் படையினர் இவ்வாறு செய்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.



**பின்னணி**

இந்தியா - பாகிஸ்தானிடையேயுள்ள ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குத் தான் வழங்கி வந்த சிறப்புரிமை அரசமைப்பை நீக்கியது இந்தியா. அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரித்து லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் என மாற்றியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காஷ்மீர் மக்களை ஒடுக்கும் வகையில், இந்திய இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்த மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

அங்கு குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் மீது காஷ்மீர் மக்கள் கல்லெறி நடத்தினர். இந்த நிலையிலேயே அங்குள்ள மக்களை ஒடுக்கி வருகிறது இந்திய இராணுவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை....

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" தேசிய வேலைத் திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு முன்னர் உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எனது தேர்தல் கால வாக்குறுதிகள் பற்றிச் சொன்னார். இன்று காலையிலிருந்து எனது தேர்தல் வாக்குறுதிகளைத்தான் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன். துறைமுகத்துக்கான அடிக்கல் நடுவது தொடக்கம் சகல விடயங்களும் நான் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகள்தான்.

காணி விடுவிப்புத் தொடர்பிலும் கூறினார். பாதுகாப்புத் தரப்பினர் ஆக்கிரமித்த 95 சதவீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இரண்டு நாள்களுக்கு முன்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இது தொடர்பில் பேசினேன். ஒரு மாதத்துக்குள் இந்தக் காணிப் பிரச்சினையைத் தீர்க்குமாறு முப்படைத் தளபதிகளுக்கும் பணித்துள்ளேன்.

எந்தவொரு அரச தலைவரும் செய்யாததை நான் செய்துள்ளேன். ஜனநாயகத்தை நாடு முழுவதுக்கும் வழங்கியுள்ளேன்.

யார் எந்த விமர்சனங்களை முன் வைத்தாலும் அரசியல் காரணங்களுக்காக எவர் மீதும் துப்பாக்கிச் சூடுகளை மேற்கொள்ளாத ஒரே யுகம் எனது ஆட்சிக் காலம்தான். எதிர்காலத்திலும் அந்த சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் மற்றும் சமத்துவத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். கடந்த காலங்களில் அரசியல் ரீதியான துன்புறுத்தல்கள் இருந்தன. வீடுகளை எரித்தார்கள். ஊடக நிறுவனங்களை கொளுத்தினார்கள். ஊடகவியலாளர்களை கடத்தினார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எதுவும் என் மீது சுமத்தப்படவில்லை.

கடந்த நான்கரை வருடகால ஆட்சியில் நான்கு வருடங்களாக பல கோடி ரூபா பணத்தைச் செலவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசமைப்பு வல்லுனர்கள் புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கும் கற்கைகளை மேற்கொள்வதற்கும் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டாலும், அதனூடாக நாட்டுக்கு எந்த பயனும் ஏற்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கு மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளனர். அதேவேளை, நாடு பிரிபடப் போகின்றது என்று தெற்கு வாழ் மக்களிடையே வெறுப்புணர்வை பரவச் செய்தனர். இந்தப் பாவ காரியத்துக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

நாட்டை முன்னேற்றுவதற்கு புதிய அரசமைப்புத் தேவைதான். நாங்களும் இணைந்து கொண்டு, வந்த 19ஆவது அரசமைப்புத் திருத்தம் முற்றாக இல்லாமற் செய்யப்படவேண்டும். இந்தத் திருத்தத்தின் ஊடாக நாட்டில் மூன்று தலைவர்கள் இருக்கும் சூழல் காணப்படுகின்றது. நாட்டை ஒழுங்காக நிர்வகிக்க முடியாத நிலமை ஏற்படுத்தியுள்ளது. அரச தலைவரிடமிருந்து அதிகாரங்களைக் குறைத்தார்கள். தலைமை அமைச்சருக்கு அதிகாரங்களை அதிகரித்தார்கள். அதே போன்று சபாநாயகருக்கும் அதிகாரங்களை வழங்கினார்கள். சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தார்கள். ஆனால் அவை சபாநாயகரின் கீழே இயங்குகின்றன. அதன் சுயாதீனத் தன்மை எப்படி இருக்கும்?

19ஆவது திருத்தத்தை ஒழிக்கும் தலைமை அமைச்சர் யார் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. நாடாளுமன்றத்தின் ஊடாகவே இது மாற்றப்பட வேண்டும். நாடாளுமன்றமே புதிய அரசமைப்பைக் கொண்டு வரவேண்டும். அரச தலைவர் தேர்தல் வரப்போகின்றது. இந்த அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு காலம் உண்டு. அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து இதனைச் செய்யவேண்டும் - என்றார். (ஒ,5,21,26)

## இன்னும்....

கூறினார். அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்படுகின்றார் என்பது 2014ஆம் ஆண்டு அவருக்கு சில மாதங்களுக்கு முன்னரே அவருக்கே தெரியும். அவர் வேட்பாளராகக் களமிறக்கப்படுவதற்கான காரணிகளாக நாமும் இருந்தோம். அது அவருக்கும் தெரியும்.

அவர் ஏனையவர்களை விட வித்தியாசமான வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். தமிழ் பேசும் மக்கள் இதனால் 85 சதவீதமான வாக்குகளை அவருக்கு வழங்கினர். அரச தலைவராக மைத்திரிபால தெரிவு செய்யப்பட்ட பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். மாவட்டச் செயலகத்தில், நடந்த கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா, எங்களுக்கும் உங்களுக்கும் இடையே எழுதப்படாத ஒப்பந்தம் இருக்கின்றது என்று கூறினார். அதற்குப் பதிலளித்த மைத்திரிபால, இணக்கப்பாடு இருக்கின்றது. அது எழுத்தில் அல்ல, இதயங்களுக்கு இடையில் எழுதப்பட்டிருக்கின்றது என்று கூறினார்.

அவருடன் நம்பிக்கையுடன் 4 ஆண்டுகள் பயணித்துள்ளோம். அவர் வழங்கிய வாக்குறுதிகளில் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

அவரது பதவிக் காலம் முடிவதற்கு இன்னும் கொஞ்சக் காலம் இருக்கின்றது. எஞ்சிய காலத்தில் ஏனைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று எங்களில் சிலர் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு அவரின் பதிலை எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ஒ,5,21,26)

## டிசெ.10....

கேட்டுக் கொண்ட டிசெம்பர் 7ஆம் திகதியில் அரச தலைவர் தேர்தலை நடத்தவும் ஆணைக்குழுவின் தவிசாளர் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, டிசெம்பர் 7ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தார். இருப்பினும், நவம்பர் மாதம் 8ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் பொருத்தமான நாளில் தேர்தலை நடத்துவது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது.

தற்போது அந்தத் தீர்மானத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மாற்றம் செய்ய முனைவதாகக் கூறப்படுகின்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்த டிசெம்பர் 7ஆம் திகதியே தேர்தலை நடத்த முனைப்புக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை - மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாது போனால் பதவி துறப்பதாகத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மகிந்த தேசப்பிரிய, டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். (ஒ,5,105)

## மைத்திரியின்....

மைத்திரிபாால சிறிசேனவின் கண்களில் பட்ட ஏழு பட்டதாரிகளுக்கு எதிர்வரும் இரு வாரங்களில் அரச வேலைவாய்ப்பை வழங்குவதற்கு மைத்திரிபால சிறிசேன சம்மதித்துள்ளார்.

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" தேசிய வேலைத் திட்ட நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதற்காக யாழ்ப்பாணம் வந்த அரச தலைவர் எட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட ஸ்மாட் சிறிலங்கா தொழில் வழிகாட்டல் நிறுவனக் கட்டடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு வந்த அவர் மக்களிடம் பேசினார். அப்போது வேலைதேடும் பட்டதாரிகள் நிற்கிறீர்களா? என்று வினவினார். பட்டம் பெற்றும் அரச வேலையின்றி இருந்த ஏழு பேர் அங்கிருந்தனர். அவர்கள் தொடர்பான விவரங்களைப் பெற்று அங்கிருந்து சென்றார். அதன் பின்னர் "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" தேசிய வேலைத் திட்டத்தின் இறுதி நிகழ்வு நேற்று பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வுக்கு வந்த மைத்திரிபால சிறிசேன நிகழ்வில் உரையாற்றினார்.

அப்போது அந்த ஏழு பட்டதாரிகளுக்கும் அடுத்த வாரம் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பேன் என்று உறுதியளித்தார். மைத்திரியின் இந்த உரையைக்கேட்ட மக்கள் தமது கைகளைத் தட்டி வரவேற்பு தெரிவித்தனர். (எ-21,26)

## 45 நாள்களுக்குள்...

முயற்சிகள் அனைத்தையும் செய்வேன் என்று வடக்கு மாகாண ஆளுநரர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய வேலைத் திட்டத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 11ஆவது முறை யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார். அது சரியானது என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு முறையும் வரும் போதும் யாழ்ப்பாண மக்களின் ஆதங்கங்கள் என்னவென்று என்னிடம் கேட்டிருக்கிறார். நான் ஆளுநராக வந்த பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்கு வருவது இது நான்காவது முறை. அந்த நான்கு முறைகளிலும் அரச தலைவரின் வருகைக்கான ஆயத்தங்களைச் செய்யும் போது அடிப்படையான தேவைகள் என்னவென்று கேட்கும் போது நான் அவரிடம் சொல்லும் விடயம் எங்களுக்கு ஜனநாயகம் வேண்டும் என்பதுதான். ஆகையால் இந்த வருகையின் போது ஜனநாயகத்துக்கு அடிப்படையாக இருக்கிற வளர்ச்சிகள் எங்களுக்குத் தேவையாக இருக்கிறது.

பொருளாதார சுதந்திரம் இல்லாது போனால், ஜனநாயக சுதந்திரத்தைப் பெறமுடியாது என்று நான் அறிந்திருக்கிறேன். அரச தலைவருடைய இன்றைய உரையிலே அவர் சொல்லக்கூடும், சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்ற ஒரு விடயம் இந்த வருகையின் போது, அரச தலைவர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வின் பெறுமதி, அதன் தாக்கம், வருகின்ற காலத்தில் வடக்கு மாகாணத்தில் நடக்கப்போகின்ற அபிவிருத்திகளின் அர்த்தத்தை அவர் சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். நான் ஆளுநராக வந்தபோது, எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ஒன்று எங்களுடைய மக்களுக்கு நிலங்களைக் கொடுக்கவேண்டும் என்பது. வீடுகளில்லாத, காணிகளில்லாத 10 ஆயிரம் பேருக்கு அவற்றை வழங்குவதற்கான இலக்கை நோக்கி எனது குழுவுடன் நான் ஓடிக் கொண்டிருக்கிறேன். இதுவரையும் 6ஆயிரம் காணி உறுதிகளைக் கொடுத்துள்ளோம். இன்னும் 4 ஆயிரம் இருக்கிறது. அவை தை மாதத்துக்கு முன்பே கொடுக்கவேண்டும் என்பது எனது கனவு. மாவை அண்ணன் (நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா) மூத்த அரசியல்வாதி. அவரை நான் சந்திக்கும் ஒவ்வொரு நேரத்திலும் அவர் சொல்வது ஒரே ஒரு விடயம், ஆளுநர் எங்களுடைய மக்களின் நிலத்தை நீங்கள் விடுவிக்க வேண்டும் என்பதே. இந்த விடயம் சிக்கலான விடயம் என்று உங்களுக்கு தெரியும். 2009ஆம் ஆண்டில் போர் முடியும் போது இராணுவம் வசமிருந்த நிலங்களில் 90 சதவீதமான காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர்வரையான காணிகளை விடுவிக்க வேண்டும். அதுவும் உங்கள் பகுதியிலேதான் கூடுதலான காணிகள் விடுவிக்கவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் மக்களுக்காக, மண்ணுக்காக, எங்கள் மொழிக்காக சிறைவாசம் சென்றவர். ஆகையால் உங்கள் வேதனை எனக்குப் புரிகிறது. ஆகையால்தான் அரச தலைவரின் உத்தரவுடன் நாங்கள் கடந்த வாரமும் சந்தித்தது போல 45 நாள்களுக்குள் என்னால் செய்யவேண்டியஎல்லாவிடயங்களையும் செய்து இந்த காணி விவகாரத்தை நாங்கள் சுமுகமாக முடித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய முயற்சியாக இருக்கிறது. - என்றார். (எ-21,26)

## துர்க்கை...

நடைபெறும்.

புதிய தங்க ரத வெள்ளோட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 11ஆம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ)

## கிளிநொச்சி...

ஒய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆவார்.

இவர் நேற்று இரவு 9 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு ஏ-9 வீதியை உந்துருளியைக் கடக்க முயன்றுள்ளார். அப்போது வீதியில் வேகமாக வந்த பட்டாரக வாகனத்துடன் மோதுண்டு கீழே விழுந்தார். அந்தநேரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து அவர் மீது ஏறியது. அதில் ஒரு கால் முழுமையாகச் சிதைவடைந்த நிலையில் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலைப்பந்தாட்டத் தொடரில்

# கிண்ணம் வென்றது யாழ்.பல்கலை அணி

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மினி ஒலிம்பிக் வலைப்பந்தாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி கிண்ணம் வென்றது.

இலங்கை பல்கலைக்கழக அணிகளுக்கு இடையிலான 8ஆவது மினி ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கானவலைப்பந்தாட்டத்தொடரில்யாழ்.பல்கலைக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. இதன் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் றுகுணு பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொழும்பு பல்கலைக் கழக அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட நிமிடத்தில் இரு அணிகளும் 34:34 என்ற புள்ளிகளைப் பெற்று சம நிலையில் காணப்பட்டன. இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு 14 நிமிடங்கள் வழங்கப் பட்டது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 12 புள்ளிகளையும், கொழும்பு பல்கலைக் கழக அணி 8 புள்ளிகளையும் பெற்றன. ஆட்ட நேர முடிவில் யாழ். பல்கலைக்கழக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 46:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (422)

# கொக்குவில் இந்து அணி இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 21 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

மழை காரணமாக 32 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப் பட்டு ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 31.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனார்த்தனன் 53 ஓட்டங்களையும், டினேஸ்குமார் 29 ஓட்டங்களையும், பிரவின் 15 ஓட்டங்களையும், துவாரகன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சயன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.



பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 31.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டும் பெற்று 21 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. இதில் ஜனு, கௌதம் இருவரும் தலா 23 ஓட்டங்களையும், சஞ்சேயன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ஜெருசன் 5 இலக்குகளையும், கஜனன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம். ஓக. 31

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் என்.நவரட்ணராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை குப்பிளான் விக்னேஸ்வர விளையாட்டுக்கழக, இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம் பெறவுள்ளது.

இதில் குப்பிளான் விக்னேஸ்வர விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாவத்தை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதவன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்னிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தவாடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலை நகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிறைட்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து லம்போதரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அறிவொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூ வொரியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மாதகல் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வானவில் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏ.எல். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்கந்தஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளம்பிறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஓக. 31

மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இதில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், மன்னார் பந்தர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் பைட்ரஸ் அணியை எதிர்த்து மன்னார் றைரடஸ் அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஓக. 31

சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம், தென்மராட்சி ரீதியாக நடத்தும் அணிக்கு 8 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகை விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து டிறிபேக்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மின்னல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூபவர் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்டோஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மின்னொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தச்சன்தோப்பு சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி யுனைற்றட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உசன் பிளேபோய்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஓக. 31

அளவெட்டி வேள்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை அளவெட்டி வேள்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் அளவெட்டி வேள்ஸ்ரார் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் வை.எவ்.சி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப்பின் 100ஆவது பிறந்த நாளை முன்னிட்டும், கில்லறி விளையாட்டுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டும் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருதயநாதர் புரம் எமில்நகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா பாடசாலை அணியை எதிர்த்து சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். பயிற்சியாளராக மிஸ்பா உல் ஹக் ?



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கும், பந்து வீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான வக்கார் யூனிஸும் நியமிக்கப்படலாம் என பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி லீக் சுற்றோடு வெளியேறியது. இதனைத் தொடர்ந்து அந்த அணியின் பயிற்றுவிப்பாளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த நிலையில், தலைமைப் பயிற்சியாளருக்கான நேர்காணல் இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மிஸ்பா உல் ஹக், டெஸ்ட் போட்டியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மோஸின் ஹஸன் கான், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளர்கள் குறித்த நேர்காணலில் பங்கேற்றவர்களில் மோஸின், டீன் ஜோன்ஸ் ஆகியோர் கடந்த காலத்தில் வெற்றிகரமான வீரர்களாகத் திகழவில்லை. மோஸினுக்கு 65 வயதாகிறது, டீன் ஜோன்ஸ் வெளிநாட்டைச் சேர்ந்தவர் என்பதால், பாகிஸ்தான் வீரர் மனதை அறிந்து பயிற்சி அளிப்பது கடினம். இதற்குமுன் பல கசப்பான சம்பவங்கள் வெளிநாட்டு பயிற்சியாளரை நியமித்ததால் நடந்துள்ளன. ஆதலால் இருவரும் நியமிக்கப்பட வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னர், வக்கார் யூனிஸ் இருந்தார். அவரே பந்துவீச்சுப் பயிற்சியாளராகவும் இருந்தார். வக்கார் யூனுஸ் இந்தப் பதவிக்கு போட்டியிடுகிறார் என்பதால், இதிலிருந்து மொஹமட் அக்ரம் விலகினார்.

வக்கார் யூனுஸுக்கு கடந்த 2011, 2016ஆம் ஆண்டுகளில் இரு முறை தலைமைப் பயிற்சியாளராக வாய்ப்பு கொடுக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு பந்துவீச்சுப் பயிற்சியாளராக வாய்ப்பு அளிக்கப்பட்ட நிலையில், சில சர்ச்சைக் காரணமாக அவர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

இந்த நிலையில், தலைமைப் பயிற்சியாளருக்கு டீன் ஜோன்ஸ், மோஸின் நிராகரிக்கப்படும் நிலையில் இயல்பாக மிஸ்பா உல் ஹக் தெரிவு செய்யப்படவே அதிகமான வாய்ப்பு இருக்கிறது.

அதேபோல, வக்கார் யூனிஸுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்று பெரும்பாலான கணிப்புகள் கூறப்பட்டாலும், அவரின் கடந்தகால சர்ச்சைகளை கருத்தில் கொண்டு வாய்ப்பு மறுக்கப்படலாம் என்றும் கருத்துக்கள் எழுந்துள்ளன.



# சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 40 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் அஜேய் 26 ஓட்டங்களையும், அபிலாஸ் 24 ஓட்டங்களையும், சிமித் 14 ஓட்டங்களையும், அபிசன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அபிசேக் 6 இலக்குகளைச் சாய்த்தார். பதிலுக்குக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 39 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எபநேசன் 91 ஓட்டங்களையும், சச்சின் 55 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் நியூட்டன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (23)

# விளையாட்டு வீரர்களை மனரீதியாக கட்டியெழுப்புவது அவசியம்

## சங்கக்கார தெரிவிப்பு

நமது கிரிக்கெட் வீரர்கள் மன ரீதியாக சோர்வடையும் போது அவர்களின் மன வலிமையை கட்டியெழுப்புவதற்கு பகிரங்க விவாதமொன்றை நடத்தவேண்டும் என்று இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

மன அழுத்தத்தால் செய்து கொள்ளப்படும் தற்கொலைகளைத் தடுக்க உதவும் 1333 இலவச சேவையை பிரபலப்படுத்தும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த போது குமார் சங்கக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நமது வீரர்கள் மன ரீதியாக சோர்வடையும் போது அவர்களைக் கட்டியெழுப்ப பகிரங்க விவாதம் ஒன்று நடைபெறாததால்தான் பல வீரர்களின் விளையாட்டுப் பயணம் இடைநடுவே தடைப் படுகின்றது என்று குமார் சங்கக்கார சுட்டிக் காட்டினார்.

# ஆஷஸ் தொடரிலிருந்து ஆண்டர்சன் விலகல்

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆஷஸ் தொடரில் இருந்து விலகியுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக கிரேக் ஓவர்ட்டன் இணைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் இடம் பெற்று வருகின்றது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்தது. ஏற்கனவே காயத்தால் அவதிப்பட்டு வந்த ஜேம்ஸ் ஆண்டர்சன் அதே இடத்தில் மீளவும் காயம் ஏற்பட்டதால் போட்டியில் இருந்து வெளியேறியிருந்தார். இருந்தும் அவர் தனது உடற் தகுதியை நிரூபிக்க இரண்டாம் தர போட்டியில் பங்கேற்று விளையாடி வந்தார். எனினும் அவரின் உடற் தகுதி நிரூபிக்கப்படாததால் அவர் ஆஷஸ் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதனால் அவருக்குப் பதிலாக கிரேக் ஓவர்ட்டன் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இவரின் விலகல் இங்கிலாந்து அணிக்கு மிகப் பெரிய இழப்பாகக் காணப்படும்.

# ஆப்கானிஸ்தானுக்கு எதிரான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஓர் டெஸ்ட் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஓர் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது. அதற்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஷாகிப் அல் ஹசனின் தலைமையில் அணி களமிறங்குகின்றது. இதில் வேகப்பந்து வீச்சாளர் முஷ்டாபிஜுர் ரஹ்மானுக்கு இடம் கிடைக்கவில்லை.

பங்களாதேஷ் அணி விவரம்:

ஷாகிப் அல் ஹசன்(அணித் தலைவர்), சவுமியா சர்கார், ஷத்மான் இஸ்லாம், மொமினுல் ஹக்யூ, முஷ்பிகுர் ரஹிம், லித்தோன் தாஸ், மெஹ்முதுல்லா, மிதுன், தைஜுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் மிராஸ், முசாடெக் ஹொஸைன் சைகாட், நயீம் ஹசன், அபு ஜாயெத் ரஹி, தஸ்கின் அகமது, எபடொட் ஹொஸைன்.





# ஹாலெப் அதிர்ச்சித் தோல்வி

# ரபேல் நடால் முன்னேற்றம்

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான ஹாலெப் 2ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்றமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் உலகத்தர வரிசையில் 4ஆவது இடத்தில் இருப்பவரும், விம்பிள்டன் சம்பியனுமான ருமேனியா நாட்டு வீராங்கனை சிமோனா ஹாலெப் 2 ஆவது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த டெய்லர் டவ்ன் சென்டை எதிர் கொண்டார். இதில் ஹாலெப் 6:2, 6:3, 6:4 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 3 முறை அமெரிக்க பகிரங்க பட்டத்தை வென்றவரும், தர வரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவருமான ரபேல் நடால் ஆஸ்திரேலியாவை சேர்ந்த கோச்சி நகிசை சந்திக்க இருந்தார். காயம் காரணமாக ஆஸ்திரேலிய வீரர் விலகினார். இதனால் நடால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

யாழ்.நகருக்கு அண்மையில் வைத்தீஸ்வரா பாடசாலைக்கு அருகில் ஒருபரப்புக் காணியில் 2 புதுவீடுகள் விற்பனைக்கு உள்ளன.

**076 072 6496, 077 017 4094**

**தவறிவிட்டது**

புங்கங்குளம் சந்திக்கும் நல்லூர் செட்டித்தெரு வீதிக்கும் இடையே காணி உறுதியும், வேறு சில முக்கிய ஆவணங்களின் பிரதியும் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 310 0171, 076 006 3256**

**Day Classes 2020 A/L Science & Maths**

**ஆரம்பம் - 02.09.2019 8.00 a.m**

Chemistry : Ka.Subeesan
Physics : R.Raakulan
Maths : G.Inkaran
Biology : K.Kalaivanan

**The Science Corner**
**Con : 077 430 7829**
Clock Tower Lane, Jaffna.

**PHYSICS**

திரு.ம.ஸ்பெல்மன்(Bsc,PGDE)
Paper Class
ஆரம்பம்: 02.09.2019
- Personal class
- Group class ஆகவும் கற்பிக்கப்படும்.

இடம்- Jaffna town, BMC Lane
(யாழ். போதனா வைத்தியசாலை பின்வீதி)
T.P-0776116724

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் **வே. அன்பழகன்** அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| **யாழ்ப்பாணத்தில்** | **சாவகச்சேரியில்** |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| **யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.** | **தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.** |

அனுமதிகளை **31.08.2019** சனிக்கிழமையில் இருந்து **06.09.2019** வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் **2.00** மணி தொடக்கம் பிற்பகல் **6.00** மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

**சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடன் ஊட்டிடுவோம்.**

**இயக்குநர்கள்**

# தென்னாபிரிக்கா தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



## டோனிக்கு இடமில்லை

தென்னாபிரிக்கா தொடருக்கான இந்திய ரி-20 அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் டோனிக்கு இடம் வழங்கப்படவில்லை. ஹார்திக் பாண்டியா இடம் பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டியில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகின்றது. இதற்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் டோனிக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. காயத்தில் இருந்து குணமடைந்த ஹார்திக் பாண்டியா அணியில் இணைக்கப்பட்டுள்ளார். புவனேஷ்வர் குமார் நீக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்: கோக்லி, ரோகித் சர்மா, தவான், ராகுல், ஷ்ரேயாஸ் அய்யர், மணிஷ் பாண்டே, ரிஷப் பந்த், பாண்டியா, ஜடேஜா, குருணால் பாண்டியா, வாஷிங்டன் சுந்தர், ராகுல் சாஹர், கலீல் அகமது, தீபக் சாஹர், நவ்தீப்.

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் சொந்தப் பாவனையில் உள்ள **Susukicelerio** கரும் சாம்பல் **(Auto Vxi) 2016 - NoV**
விற்பனைக்கு - 50 **km, Rs.25/75**

**077 699 2027**

**விற்பனைக்குண்டு**

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும், **Hunk Black Colour 150.CC** மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

**077 071 1758, 076 658 6443**

**வேலையாள் தேவை**

இருபாலைச் சந்தியில் உள்ள புடைவை கடைக்கு அனுபவமுள்ள பெண் தேவை.

**077 111 8992**

**வெளிநாடு, உள்நாடு மணமகன், மகணமகள் தேவையா?**

**Jaffnaroots.com**
என்ற இணைய தளத்தில் இலவசமாக பதிவு செய்யுங்கள்

**0014 1631 95236 (கனடா)**




**திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்**




இல.109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 021 221 9119**

இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 021 222 4101**




இல. 30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 021 222 5511**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org